விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 254 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 14 சனிக்கிழமை (30.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை


T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## ஒன்றுடன் ஒன்று கட்டியணைத்தவாறு
# எலும்புக்கூட்டுத் தொகுதி செம்மணியில் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

- நேற்று 10 மனித எச்சங்கள் செம்மணியில் இனங் காணப்பட்டன.
- இதுவரை 187 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## முன்னாள் அமைச்சர் ராஜித விளக்கமறியலில்



15ஆம் பக்கம் பார்க்க

## வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பினார் ரணில்



15ஆம் பக்கம் பார்க்க

## நுணாவில் கிழக்கில்
# மரபுரிமைச் சின்னமான சுமைதாங்கி இடித்தழிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நுணாவில் கிழக்கு கல்வயல் வீதியில் அமைந்திருந்த பாரம்பரிய மரபுரிமைச் சின்னமான சுமை தாங்கி தனியார் ஒருவரால் நேற்று வெள்ளிக்கிழமை முற்றாக இடித்து அகற்றப் பட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் சாவகச்சேரி நகர சபை உபதவிசாளர் கிஷோருக்கு அறிவித்ததையடுத்து குறித்த இடத்திற்குச் சென்று நிலைமைகள் 15ஆம் பக்கம் பார்க்க

# பரந்தனில் கோர விபத்து: இரு இளைஞர்கள் உயிரிழப்பு



(கிளிநொச்சி)

பரந்தனில் இடம்பெற்ற கோர விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

கிளிநொச்சி ஏ9 வீதி கரடிப்போக்குக்கும் பரந்தன் சந்திக்கும் இடையில் நேற்றுக் காலை 5.30 மணியள



15ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி
# வடக்கு - கிழக்கில் இன்று மாபெரும் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரி இன்று சனிக்கிழமை வடக்கு கிழக்கில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை செம்மணியில் மாபெரும் போராட்டம் நடைபெறவுள் 15ஆம் பக்கம் பார்க்க

# இனப் படுகொலைக்கு நீதி கோரி யாழில் கையெழுத்துப் போராட்டம்




15ஆம் பக்கம் பார்க்க

# உறவுகள் மீது அரசு கரிசனை கொண்டுள்ளது



## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மீது அரசாங்கம் கரிசனை கொண்டுள்ளது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் 15ஆம் பக்கம் பார்க்க

# முன்னாள் இராஜாங்க அமைச்சர்
## நிமல் லான்சா கைது

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா, நேற்று வெள்ளிக்கிழமை பொலிஸாரால் கைது செய் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் இ.போ.ச
# தொழிற்சங்கங்களின் பணிப் பகிஷ்கரிப்பு நிறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபை முன்னெடுத்த பணிப் பகிஷ்கரிப்பு நிறைவுக்கு வந்தது.

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் யாழ்.அரச பஸ் சாலை அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதுக் கிணங்க நேற்று அரச பஸ் சேவைகள் யாவும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சா/த), (உ/த) பரீட்சைகளை இனி உரிய காலத்தில் நடத்தத் திட்டம்



(கொழும்பு)

2026 ஆம் ஆண்டு முதல் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை உரிய கால அட்டவணையில் நடத்துவற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டத்தின் பூர்வாங்கக் கலந்துரையாடலின் போதே இது குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# புதிய இரண்டாயிரம் ரூபாய் நாணயத்தாள் வெளியீடு




(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்ட 2000 ரூபாய் புதிய நினைவு நாணயத் தாள், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவினால் நேற்று (29) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

புழக்கத்திற்கான நினைவு நாணயத் தாளாக இது வெளியிடப்பட்டுள்ளதுடன், இந்த நாணயத்தாள் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட 5 ஆவது நினைவு நாணயத்தாள் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## எலும்புக்கூட்டு...

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் 37 ஆவது நாள் அகழ்வு யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மேற்பார்வையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் ஒன்றுடன் ஒன்று கட்டியணைத்தவாறு இரு எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஒரு பெரிய எலும்புக் கூட்டின் நெஞ்சுப் பகுதியுடன் அணைக்கப் பட்டவாறு ஒப்பீட்டளவில் சிறிய எலும்புக் கூடு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனை சுத்தப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதனை முற்றாக அகழ்ந்து எடுத்த பின்னர், சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையின் பிரகாரமே குறித்த எலும்புக் கூடுகள் தொடர்பில் உறுதியாகக் கூற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நேற்றைய அகழ்வில் 10 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் புதிதாக மேலும் 10 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும் செம்மணி மனிதப் புதைகுழியில் 174 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதோடு இதுவரையில் 187 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

# கேப்பாப்பிலவில் காணி கோரிய விமானப்படை கடும் ஆட்சேபனை வெளியிட்ட ரவிகரன் எம்.பி

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் அமைந்துள்ள 0.5ஹெக்டயர் மக்களின் விவசாயக்காணிகளைத் தமது தேவைக்கென பயன்படுத்த கேப்பாப்பிலவு விமானப்படையினர் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதியைக் கோரியிருந்தனர்.

நேற்று இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது

குறித்த கோரிக்கைக்கு கடும் எதிர்ப்பினை வெளியிடவன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேப்பாப்பிலவில் ஏற்கெனவே படையினரால் மக்களின் காணிகள் பல அபகரிக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியதோடு படையினரால் ஏற்கெனவே ஆக்கிரமித்திருந்த குறித்த காணி விடுவிப்புச்செய்யப் பட்டநிலையில், அக்காணியில் மக்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தக்காணியினை விமானப்படை தமக்குத்தருமாறு மீண்டும் கோருவது பொருத்தமற்ற செயற்பாடாகும்.

அத்தோடு இன்னும் 190ஏக்கர் அளவில் மக்களுக்குரிய காணிகள் கேப்பாப்பிலவில் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. இவ்வாறிருக்க விமானப்படையினர் விடுவிக் கப்பட்ட மக்களின் காணியினை மீண்டும் கோருவது வேடிக்கையாகவுள்ளது.


யுத்தம் மௌனிக்கப்பட்டு ஒன்றரைத் தசாப்தகாலத்திற்கு மேலாகியுள்ள நிலையில் மக்களின் காணிகளை அபகரித்து இங்கிருந்து கொண்டு விமானப்படையினர் யாருடன் யுத்தம் செய்யப்போகின்றனர்.

எனவே கேப்பாபிலவு மக்களின் விவசாயக் காணிகளை விமானப் படைக்கு வழங்குவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமுடியாதென கடும் ஆட்சேபனை வெளியிட்டிருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களது கடுமையான எதிர்ப்பினையடுத்து விமானப் படையினருக்கு காணி வழங்குவதில்லை என முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


# மரண அறிவித்தல்

தோற்றம் 14 - 04 - 1947



மறைவு 28 - 08- - 2025

## கதிர்காமு மார்க்கண்டு

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

யாழ்ப்பாணம் கரவெட்டி கிழக்கு யார்க்கருவைப் பிறப்பிடமாகவும் கிழவிதோட்டத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கதிர்காமு மார்க்கண்டு (முன்னாள் தபால் அதிபர்) அவர்கள் 28.08.2025 வியாழக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு - பாறுபதி தம்பதிகளின் இளைய புதல்வரும் காலஞ்சென்ற சோதிடர் ஆசிரியர் சிதம்பரப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஓய்வுநிலை ஆசிரியை சரோஜினிதேவி அவர்களின் அன்புக் கணவரும் அகிலன்(U.K.), வாகீசன்(U.K.), விஷ்ணுகாந்தன்(U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலா, வித்தியா, மேனகா ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷன், அனுஷ்கா, ஜானுஷன், கனிமொழி, ஆதர்சன், ஆதவி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற காராளசிங்கம், சுப்பிரமணியம், கணபதிப்பிள்ளை, கந்தசாமி, கனகம்மா மற்றும் இலட்சுமி(சின்னமணி), சின்னப்பிள்ளை ஆகியோரின் நேசமுடைய சகோதரனும்காலஞ்சென்ற குலசபாநாதன் மற்றும் திரவியநாதன், சந்குணநாதன், சிவசெல்வநாதன், குலமணிதேவி, இந்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(31.08.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02:00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிழவிதோட்டம், கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
077 761 2969

தகவல் : குடும்பத்தினர்
ஐ.[illegible] (மருமகன்)
சி.இரா[illegible]

(5180)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 01.08.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் செல்வமனோகரி மகேஸ்வரன் [மங்களன்]



(இளைப்பாறிய ஆசிரியர் –
கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (31.08.2025) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் மதியம் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

15ம் நாள்

குடும்பத்தினர்
071 829 7207, 077 747 5619

(C-3763)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 இற்கும் குறைவான மாணவர்களுடன்
# வடக்கில் 275 பாடசாலைகள்!
## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**50இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட அனைத்து பாடசாலைகளையும் ஒரே தடவையில் மூடுவதற்கு கல்வி அமைச்சு எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை என கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நலக கலுவேவா தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "ஒவ்வொரு கல்வி வலயத்திலும் உள்ள பாடசாலைகளை வலுப்படுத்துவதற்கான ஒரு திட்டம் ஏற்கனவே நடந்து வருகின்றது. ஒரு குறிப்பிட்ட பாடசாலைகளைப் பராமரிக்கும் போது மட்டுமே மூடுவதற்கான பரிசீலனை மேற்கொள்ளப்படும்.

நாடு முழுவதும் உள்ள 10,194 பாடசாலைகளில் மொத்தம் 1,486 பாடசாலைகளில் 50இற்கும் குறைவான மாணவர்கள் மட்டுமே கல்வி பயின்று வருகின்றனர்.

மேலும் வட மாகாணத்தில் இதுபோன்ற பாடசாலைகள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

குறிப்பாக வடமாகாணத்தில் 275 பாடசாலைகளும் , அதைத் தொடர்ந்து மத்திய மாகாணத்திலும் 240 பாடசாலைகளும், சப்ரகமுவ மாகாணத்தில் 230 பாடசாலைகளும், ஊவா மாகாணத்தில் 158 பாடசாலைகளும், கிழக்கு மாகாணத்தில் 141 பாடசாலைகளும், வடமேற்கு மாகாணத்தில் 133 பாடசாலைகளும், தெற்கு மாகாணத்தில்125 பாடசாலைகளும், வடமத்திய மாகாணத்தில் 111 பாடசாலைகளும், மேற்கு மாகாணத்தில் 73 பாடசாலைகளும் காணப்படுகின்றன.

குறைந்த மாணவர் சேர்க்கை உள்ள பாடசாலைகளை மூடிவிட்டு அருகிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதற்கிடையில், இலங்கை அதிபர்கள் சங்கம் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

மாணவர்களை அருகிலுள்ள பாடசாலைகளுக்கு மாற்றுவது நகர்ப்புற வகுப்பறைகளில் நெரிசலை அதிகரிக்கும் என்று எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



# மோசடி வலைத்தளங்கள் குறித்து எச்சரிக்கை!

(கொழும்பு)

தனிப்பட்ட, நிதித் தகவல்களைத் திருடுவதற்காக அதிகாரபூர்வ வங்கி இணையத் தளங்களைப் பின்பற்றும் மோசடி வலைத்தளங்கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு இலங்கையின் பல வங்கிகள் வாடிக்கையாளர்களை வலியுறுத்தியுள்ளன.

இந்த வாரம் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின்படி, மோசடி செய்பவர்கள் மின்னஞ்சல்கள் மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் இணைப்புகளைப் பரப்பி, எழுத்துப்பிழைகள் அல்லது அசாதாரண எழுத்துக்களைக் கொண்ட போலி வலைத்தளங்களுக்கு பயனர்களை வழிநடத்துகிறார்கள்.

வாடிக்கையாளர்கள் அத்தகைய இணைப்புகளைக் கிளிக் செய்வதைத் தவிர்த்து, அதிகாரப்பூர்வ வலைத்தள முகவரிகளை நேரடியாக தட்டச்சு செய்து அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சந்தேகத்திற்கிடமான எந்தவொரு செயற்பாடு குறித்தும் உடனடியாக முறையிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளனர். (நி)

# ஓய்வூதிய நிலுவைத்தொகை ஒக்டோபருக்குள் வழங்கப்படும்
## ஓய்வூதியத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களின் ஓய்வூதிய நிலுவைத் தொகை ஒக்டோபர் மாத இறுதிக்குள் வழங்கப்படும் என ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சைபர் தாக்குதலின் பின்னர் அரச ஊழியர்களின் தரவுக்கட்டமைப்பில் ஏற்பட்ட தொழிநுட்ப கோளாறு காரணமாகவே ஓய்வூதியக் கொடுப்பனவை செலுத்த முடியவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்தநிலையில் சுமார் 4 மாதங்களாக சில அரச ஊழியர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவை முழுமையாக செலுத்த முடியாமல் போயுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சாமிந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அத்துடன் இந்த வருடம் ஓய்வு பெற்ற சிலர் எவ்வித ஓய்வூதியக் கொடுப்பனவையும் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# செயற்கை முறையில் பதப்படுத்தப்பட்ட உணவுகளால் உயிர் ஆபத்து
## பிரித்தானியா ஆய்வு நிறுவனம் தகவல்

(கொழும்பு)

பிரித்தானியாவின் UK Biobank ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள சமீபத்திய ஆய்வில், செயற்கை முறையில் பதப்படுத்தப்பட்ட உணவுகள், நிறமூட்டிகள் மற்றும் சுவையூட்டிகள் மனிதர்களின் நீண்ட ஆயுளுக்கு தீங்கு விளைவிக்கக்கூடும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.



ஆய்வில் சக்கரை, இனிப்புகள், நிறப்பொருட்கள் மற்றும் சுவை சேர்க்கைகள் அதிகமாக உட்கொள்ளப் படும் போது மரண அபாயம் அதிகரிக்கும் என்பது கண்டறியப் பட்டுள்ளது. ஜேர்மனியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், அதிகமாகப் பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் அதில் உள்ள குறிப்பிட்ட சேர்க்கைகள் உடல் நலத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதோடு உயிர் ஆபத்தையும் ஏற்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த உணவுகள் அதிக கொழுப்பு, சக்கரை, உப்பு கொண்டவை. ஆனால் அவை நார்ச்சத்து, புரதம், விற்றமின் குறைவு கொண்டதால், ஆரோக்கியத்தைப் பாதிக்கலாம். மக்கள் இவற்றை அதிகமாக உட்கொள்கின்றனர். ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் மொத்த கலோரிகளின் பாதியை பதப் படுத்தப்பட்ட உணவுகள் மூலம் பெறுகின்றனர்.


மேலும், அதிக பதப்படுத்தப்பட்ட உணவுகள் உடல் பருமன், எடை அதிகரிப்பு மற்றும்பல ஆரோக்கிய பிரச்சினைகளை உருவாக்குகின்றன. பிரிட்டிஷ் சூப்பர் மார்க் கெட்டில், சுவை சேர்க்கைகள் மொத்த உணவு உட்கொள்ளலின் 13.6% இடத்தைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே ஆரோக்கியம் காக்க, இயற்கை உணவுகளை உட்கொள்ளுமாறு மருத்துவர்கள் பொது மக்களை வலியுறுத்தி வருகின்றனர். (நி)

# அரச நிறுவனங்கள் அனைத்திலும் கைரேகை ஸ்கானர்கள்

(கொழும்பு)

அனைத்து அரச நிறுவனங்களிலும், கைரேகை ஸ்கானர்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

பல அரச அலுவலகங்களில் ஏற்கனவே கைரேகை ஸ்கானர்கள் பொருத்தப்பட்டிருந்தாலும், இதுவரை இந்த முறையைப் சிலர் பின்பற்றுவதில் லையென அமைச்சர் ஏ.எச். எம்.எச். அபயரத்ன தெரிவித்துள்ளார்.





கைரேயை ஸ்கானர்களை அனைத்து நிறுவனங்களுக்கும் அறிமுகப்படுத்தப் படுவதை அரசாங்கம் உறுதி செய்யும் என்றும், அது ஊழியர்களுக்கும், நிர்வாகத்திற்கும் ஒரு வசதியான செயல்முறை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் சமீபத்தில் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால், இந்தக் கொடுப்பனவுகள் துல்லியமாக வழங்கப்படுவதை உறுதி செய்வது மிக முக்கியமானது என அமைச்சர் சுட்டிக்காட்டினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஐ.சி.சி தரவரிசையில் 40 இடங்கள் முன்னேறிய கேமரூன் கிரீன்




ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தர வரிசைப்பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.

இதில், துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் இந்தியாவின் சுப்மன் கில் 784 புள்ளிகளுடன் முதல் இடத்தை தக்கவைத்துக் கொண்டார். ரோகித் சர்மா, விராட் கோலி 2 மற்றும் 4ஆவது இடத்தில் நீடிக்கின்றனர். சமீபத்தில் நடந்த தென் ஆபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் சதம் விளாசிய அவுஸ்திரேலியாவின் டிராவிஸ் ஹெட் 669 புள்ளி 11ஆவது இடத்திலும், மிட்சல் மார்ஷ் 44ஆவது இடத்திலும் உள்ளனர். அதிரடியாக சதமடித்த கேமரூன் கிரீன் கிடுகிடுவென 40 இடங்கள் முன்னேறி 78 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

பந்து வீச்சாளர் தரவரிசையில் இந்தியாவின் குல்தீப் யாதவ் 650 புள்ளியுடன் 3ஆவது இடத்திலும், ரவீந்திர ஜடேஜா 616 புள்ளியுடன் 9ஆவது இடத்திலும் உள்ளனர்.

முதலிடத்தில் தென் ஆபிரிக்காவின் கேசவ் மகராஜ் நீடிக்கிறார். இலங்கையின் மகேஷ் தீக்‌ஷனாவும் முதல் இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளார். (3)





கிளிநொச்சி கல்லாறு தமிழ் வித்தியாலயத்தில் 55 ஆவது படைப்பிரிவின் பங்களிப்புடன் புதிதாக உருவாக்கப்பட்ட வலைப்பந்தாட்ட மைதானம் மற்றும் சிறுவர் பூங்காவின் திறப்பு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

## கொண்டாட வரவில்லை அக்கறையுடன் வந்துள்ளோம்!

### மௌனம் கலைத்த ஆர்.சி.பி




கடந்த ஜூன் 3 ஆம் திகதி ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி முதல் முறையாக ஐபிஎல் கிண்ணத்தை வென்றது.

இதன்மூலம் ஆர்.சி.பி அணி ரசிகர்களின் 18 ஆண்டுகால ஏக்கம் தீர்ந்ததால், 4ஆம் திகதி மைதானத்தில் நடந்த வெற்றிக் கொண்டாட்டத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

இதனால் மைதானத்திற்கு வெளியே கூடியிருந்த ஏராளமான மக்களிடையே 11 பேர் உயிரிழந்தனர். மற்றும் 56 பேர் காயமடைந்தனர்

இந்த துயர சம்பவத்தையடுத்து, கிட்டத்தட்ட இரண்டரை மாதங்கள் கழித்து தற்போது ஆர்.சி.பி அணி நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் கூறியுள்ளதாவது, "அன்புள்ள 12ஆவது வீரர் படையே, இது உங்களுக்கு எங்கள் இதயப்பூர்வமான கடிதம்! நாங்கள் கடைசியாக இங்கு பதிவிட்டு கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் ஆகப்போகிறது. மௌனமாக இருந்ததற்கு காரணம் இல்லாமல் அல்ல, அது துக்கம்.

இந்த இடம் ஒரு காலத்தில் நீங்கள் மிகவும் ரசித்த ஆற்றல், நினைவுகள் மற்றும் தருணங்களால் நிறைந்திருந்தது. ஆனால் ஜூன் 4 ஆம் திகதி எல்லாவற்றையும் மாற்றியது.

அந்த நாள் எங்கள் இதயங்களை உடைத்தது, அன்றிலிருந்து அமைதி எங்கள் இடத்தைப் பிடித்துக் கொள்ளும் வழியாக இருந்து வருகிறது. அந்த அமைதியில், நாங்கள் துக்கப்படுகிறோம். கேட்டல், கற்றல் மற்றும் மெதுவாக வெறும் பதிலை விட வேறு ஒன்றை உருவாக்கத் தொடங்கினோம்.

நாங்கள் உண்மையிலேயே நம்பும் ஒன்று. அப்படித்தான் ஆர்.சி.பி கேர்ஸ் உயிர்பெற்றது. அது நம் ரசிகர்களை மதிக்க, குணப்படுத்த மற்றும் அருகில் நிற்க வேண்டிய தேவையில் இருந்து வளர்ந்தது.

நமது சமூகம் மற்றும் ரசிகர்களால் வடிவமைக்கப்பட்ட அர்த்தமுள்ள செயலுக்கான தளம். இன்று கொண்டாட்டத்துடன் அல்ல, அக்கறையுடன் இந்த இடத்திற்கு நாங்கள் திரும்புகிறோம்.

பகிர்ந்துகொள்ள, உங்களுடன் நிற்க, முன்னோக்கி நடக்க, ஒன்றாக. கர்நாடகாவின் பெருமையைத் தொடர ஆர்.சி.பி கேர்ஸ் மற்றும் நாங்கள் எப்போதும் செய்வோம் என கூறப்பட்டுள்ளது. (3)

## புலிக்கு பிறந்தது பூனையாகுமா? அதிரடி காட்டும் சேவாக் மகன்





இந்திய கிரிக்கெட் ஜாம்பவான்களில் அதிரடி ஆட்டக்காரர் சேவாக். இவரின் ஆட்டத்தை எந்தவொரு இந்திய இரசிகராலும் மறக்கவே முடியாது. ஸ்பின்னர்களை நடந்து வந்து எளிதாக அட்டாக் செய்வதில் சேவாக்கிற்கு நிகர் சேவாக் மட்டும்தான்.


இந்நிலையில் சேவாக் தனது இரு வாரிசுகளையும் கிரிக்கெட் களத்திற்குள் இறக்கி விட்டுள்ளார். இருவரும் டில்லி பிரீமியர் லீக் தொடரில் 2 அணிகளால் வாங்கப்பட்டுள்ளனர்.

இதில் மூத்த மகன் ஆர்யாவீர் மத்திய டில்லி கிங்ஸ் அணிக்காகவும், இளைய மகன் வேதாந்த் வடக்கு டில்லி லயன்ஸ் அணிக்காகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். போட்டியின்போது ஆர்யாவீர், நவ்தீப் சைனி பந்து வீச்சில் அடுத்தடுத்து 2 பவுண்டரிகளை அடித்தார். அந்த இரு பவுண்டரிகளையும் டவுன் தி டிராக் நடந்து வந்து சிறிதும் அச்சப்பட்டாமல் அடித்த ஆர்யா வீரின் ஆட்டம் தந்தை சேவாக்கை நினைவுபடுத்தியது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து

## திரு. இரத்தினம் இராஜரட்ணம்



யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில்
20 வருடங்களுக்கு மேலாகச்
சேவையாற்றி **28.08.2025** அன்று
தனது 60ஆவது அகவையில்
ஓய்வுபெற்றுச் சென்ற
**திரு. இரத்தினம் இராஜரட்ணம்**
அவர்களின் அளப்பரிய சேவையை
உளமார வாழ்த்துவதோடு
அவர் தனது ஓய்வுகாலத்தில்
சீரும் சிறப்புடனும் உடல், உள
ஆரோக்கியத்துடனும் இருக்க
எல்லாம் வல்ல இறைவனை
வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்...
ஊழியர் நலன்புரிச் சங்கம்
பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்.

(5176)

# 35 ஆவது பிறந்தநாளும் 17 ஆவது நினைவு ஆண்டும்



மண் மகிழ–30.08.1990 மனம் நெகிழ–15.08.2008

## செல்வி. கணேசலிங்கம் பத்மஜா

உன் அன்புவிழிதனைக் காணா
ஏங்குதம்மா எம் நெஞ்சம்!
உன் பொங்கும் பூ முகம்தனைப் பாரா
வாடுதம்மா எம் வாழ்வு!
கையில் அணைத்தெடுத்து
அன்பாய் முத்தமிட நீ எம்மிடம்
இல்லையே எண்றெண்ண;
இதுவென்ன வாழ்வென்று வெறுக்கிறதே!

(C-3762)

பேக்கரி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

குடும்பத்தினர்

## அத்துரலியவுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் நுகேகொடை, நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டதை அடுத்து செப்ரெம்பர் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஓகஸ்ட் 18ஆம் திகதி கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் அவரைக் கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அதியட்சகர் எஃப்.யு. வூட்லர் தெரிவித்தார்.

கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு அதிகாரிகள் முன்வைத்த வேண்டுகோளைத் தொடர்ந்து அவருக்கு எதிராக பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்தன தேரரை கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் கடந்த காலங்களில் தேடி வந்தனர்.

2020ஆம் ஆண்டு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றதற்காக, அபே ஜன பல கட்சியின் பொதுச் செயலாளர் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரை கடத்தி, அவரை அச்சுறுத்தியமை தொடர்பில் அத்துரலியே ரத்தன தேரர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## பல்கலை மாணவன் மீது பகிடிவதை நான்கு மாணவர்கள் கைது!

(கொழும்பு)

களனி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவரை பகிடிவதைக்கு உட்படுத்திய அதே பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் நான்கு மாணவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த முறைப்பாட்டின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கடந்த புதன்கிழமை சந்தேக நபர்களான பல்கலை மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் வெல்லவாய, ஹபரணை, வவுனியா மற்றும் மஹகிரில்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26 முதல் 28 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

இந்த பகிடிவதை சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூன்று பல்கலை மாணவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்படும்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள், தங்களது பதவி காலத்தில் மேற்கொண்டதாக கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில், முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணை நடத்தப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டுப் பயணத்துக்காக அரசு நிதியை தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்தே, இந்த தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாகக் குற்றப் புலனாய்வுத் துறையினர் கடந்த வாரம் ரணில் விக்கிரமசிங்கவை, கைது செய்து கொழும்பு கோட்டை நீதவான் முன் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் மூன்று நாட்களில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்தநிலையில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால், முன்னாள் ஜனாதிபதிகள் அல்லது வேறு எவருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரணை செய்யப்படும் என்று அரசாங்கத்தரப்பு தெரிவித்துள்ளது. எனினும் தற்போது வரையில் யாருக்கும் எதிராக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதா என்பதை அரசாங்கத்தரப்பு தெரிவிக்கவில்லை. (நி)

# ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

**காரைநகர் பிரதேச சபை : வடக்கு உப அலுவலகம் வேம்படி**
**விண்ணப்பதாரரின் பெயர் : நவரத்தினம் துவாரகன்**
**ஆதனப்பதிவேட்டின் படி விபரம் :**

| ஆதன பெயர் | வட்டாரம் | வீதி | ஆதன இல |
|---|---|---|---|
| 01. பொன்னுத்துரை நவரத்தினம் | 08 | வேம்படி வீதி | 105/62 |
| 02. சொந்தக்காரர் | 01 | நாச்சிமார் கோவில் 1ஆம் ஒழுங்கை | 33 |
| 03. பொன்னுத்துரை நவரத்தினம் | 02 | கோவளம் வீதி | 64 |
| 04. சொந்தக்காரர் | 02 | சுற்றுவட்ட வீதி | 438,440,442,444 |

**மேற்படி விபரத்தில் அமைந்துள்ள ஆதனங்கள் உறுதியின் பிரகாரம்**

| ஆதனம் | மாகாணம் | மாவட்டம் | பிரதேச செயலர் பிரிவு | கிராம சேவகர் பிரிவு | இறை | ஆதனப் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வடமாகாணம் | யாழ்ப்பாணம் | காரைநகர் | ஜே/40 | காரைநகர் மேற்கு | சல்லை |
| 2 | வடமாகாணம் | யாழ்ப்பாணம் | காரைநகர் | ஜே/41 | காரைநகர் வடமேற்கு | முல்லைப்பிளவு |
| 3 | வடமாகாணம் | யாழ்ப்பாணம் | காரைநகர் | ஜே/48 | காரைநகர் மத்தி | ஆலடி |

**ஆதன விபரம்**

**"சல்லை"** எனும் பெயருள்ள நிலப்பரப்பு 05 குளி 06 விஸ்தீரணமுள்ள ஆதனம், **"முல்லைப்பிளவு"** எனும் பெயருள்ள நிலப்பரப்பு 13 குளி 10.93 விஸ்தீரணமுள்ள ஆதனம், **"ஆலடி"** எனும் பெயருள்ள நிலப்பரப்பு 05 குளி 6.40 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனங்கள் தமக்கு உரித்தானது என பிரசித்த நொத்தாரிசு **தில்லைநாதன் அருச்சுனா** அவர்கள் முகதாவில் நிறைவேற்றப்பட்ட முறையே 826,825,822,824 ஆம் இலக்க 2020.03.08 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதிகளின் மூலம் நவரத்தினம் துவாரகன் என்பவர் தனது அற்றோனிக் தத்துவக்காரர் (சிவநாயகி சுப்பிரமணியம்) மூலம் பொன்னுத்துரை மாணிக்கம் இறக்க ஒரே மகனான எனது தந்தை பொன்னுத்துரை நவரத்தினம் மாதாவழி முதுசம் என்ற அடிப்படையில் உரிமையாளரானார். எனது தந்தை பொன்னுத்துரை நவரத்தினம் இறக்க ஒரே மகனான என்னை பிதாவழி முதுசமாக வந்தடைந்ததாக வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன எல்லை**

| ஆதனம் | கிழக்கு | வடக்கு | மேற்கு | தெற்கு |
|---|---|---|---|---|
| 1 | கந்தையா பாலசிங்கத்தின் ஆதனமும் வீதியும் | தியாகராசா கைம்பெண் கமலாதேவியின் ஆதனம் | ஒழுங்கை | சிவசம்பு குலசிங்கத்தின் ஆதனமும், சிவசம்பு பொன்னம்பலத்தின் ஆதனமும் வீதியும் |
| 2 | ஒழுங்கை | ஒழுங்கை | தம்பிராசா அருள்ராசாவின் ஆதனம் | இரத்தினசிங்கம் புனிதவதியின் ஆதனம் |
| 3 | மாரிமுத்து அம்பலவாணரின் ஆதனம் | அம்பலவாணரினதும் பெண் சுந்தரியினதும் ஆதனங்கள் | கேணிக்கான ஒதுக்கமும் முத்துக்குமார் ரட்ணசிங்கத்தின் ஆதனமும் கந்தையா பத்மசிங்கத்தின் ஆதனமும் | றோட்டு |

மேற்குறித்த ஆதனம் நவரத்தினம் துவாரகன் **என்பவருக்கு** முறையே **826,825,822,824 இல 2020.03.08 ஆம் திகதிய உறுதிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.** நில அளவையாளர் எஸ் பாலேந்திரன் என்பவரால் 02.07.2019 ஆம் திகதி 2019/935, 2019/934, 2019/933, 2019/937 இலக்க நில அளவைப்படங்களின் மூலம் துண்டு 1 என சுட்டிக்காட்டியபடி **ஆதனங்கள்** காணப்படுகின்றது. நவரத்தினம் துவாரகன் என்பவர் காரைநகர் பிரதேச சபையின் வேம்படி வடக்கு உபஅலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதனப் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் நவரத்தினம் துவாரகன் என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப் பொறுப்பிற்கும் காரைநகர் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**பிரதேச சபை, காரைநகர்.**

(5170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ உபகரணங்களை வெளியில் கொண்டு செல்லும் முயற்சியை நிறுத்து!

## கிளிநொச்சியில் கவனயீர்ப்பு

**(தருமபுரம்) ---------------- இரண்டு ஆண்டுகளாக இயங்காமலுள்ள பெண்ணோயியல் சிறப்பு மருத்துவமனையை இயக்குவதற்கான மக்கள் போராட்டம் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.**



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அமைந்துள்ள வடக்கு மாகாண பெண் நோயியல் மருத்துவமனையை இயங்காமல் செய்து அங்குள்ள நவீன மருத்துவ உபகரணங்களை வேறு மருத்துவமனைகளுக்கு இடமாற்றும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வெள்ளிக் கிழமை கிளிநொச்சி வைத்திய சாலை முன்றில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் முன்னெடுத்திருந்தனர்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டு இன்று வரை இயங்காத நிலையில் காணப்படுகின்ற இச் சிகிச்சை பிரிவை ஆரம்பிக்க வேண்டுமென்றும் தேவையான ஆளணிகளை நியமிக்குமாறும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

குறித்த போராட்டத்தில் வடக்கு மாகாண பெண் நோயியல் விசேட மருத்துவ நிலையத்தை விரைந்து செயற்படுத்தும் ஆளணிகளை வழங்கு, வடக்கு மக்களுக்கு நெதர்லாந்து அரசு வழங்கியதை வெளியில் கொண்டு செல்லாதே, மருத்துவ உபகரணங்களை வெளியில் கொண்டு செல்லும் முயற்சியை முற்றாக நிறுத்து போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவ் வார்ப்பாட்டத்தின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் வடக்கு மாகாண ஆளுநர், மத்திய சுகாதார அமைச்சர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் பிரதேச சபை உறுப்பினர்கள் கிளிநொச்சி மாவட்ட வர்த்தகர்கள் பிரதேச மக்கள் நலன்புரிச் சங்க நிர்வாகத்தினர் என பல கலந்து கொண்டிருந்தனர். (8-315-316)

# இனப்படுகொலைக்கு நீதிகோரி கையெழுத்துப் போராட்டம்













(நெளுக்குளம்)

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு, கிழக்கு மண்ணில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் நடைபெற்ற தமிழ் இனப்படு கொலைகளுக்கும் நீதியைக் கோருவதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் கையெழுத்துச் சேகரிக்கும் செயற்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் குறித்த கையெழுத்துச் சேகரிக்கும் செயற்பாடு நேற்று முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டன.

(8-299-316-285-250)

## சட்டவிரோதமாக மாடுகளை ஏற்றி வந்த சாரதி கைது

(வவுனியா)

வவுனியாவில் முறையான அனுமதி பத்திரமின்றி மாடுகளை ஏற்றி வந்த வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர். வவுனியா, செட்டிகுளம், சின்னச் சிப்பிக்குளம் பகுதியில் பயணித்த பாரவூர்த்தி ஒன்றை சோதனை செய்த போது முறையான அனுமதியின்றி மாடுகள் கொண்டு செல்லப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த மாடுகள் மீட்கப்பட்டதுடன், குறித்த வாகனத்தை கைப்பற்றிய பொலிஸார் அதனை செலுத்தி வந்த சாரதியையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர். (8-250)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 350 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 240 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 200 | 140 | 200 |
| தக்காளி | 300 | 280 | 300 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 250 | 350 | 230 | 300 |
| கரட் | 300 | 450 | 500 | 400 | 500 |
| பூசணி | 100 | 120 | 80 | 60 | 100 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-250 | 300 | 230 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 120 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 200 | 250 | 250 | 400 | 300 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 180 | 250 |
| பீற்றூட் | 100 | 100 | 250 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 450 | 400 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 180 | 200 |
| போஞ்சி | 600 | 650 | 600 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 150 | -- | 300 |
| கீரை – 1 பிடி | 100 | 40-100 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 | 300-400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 150 | 120-180 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 650 | 500 | 450 | 900 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 150 | 250 | 300 |
| முள்ளங்கி | 100 | 160 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 180 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 80 | 150 |





நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் ஆவணி சதுர்த்தி தினம் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்றது. விநாயகப்பெருமான் உள்வீதி, வெளிவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (படங்கள் - சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடத்திற்கு ஒரு கன்று

“கறவை மாடு வளர்ப்பில் வருடத்துக்கு ஒரு கன்று” எனும் எண்ணக்கரு மாடுகளின் இனப் பெருக்க அடைவு மட்டம், ஊட்டச்சத்து நிலை மற்றும் பண்ணையின் முகாமைத்துவ நிலை போன்ற வற்றை உணர்த்துகிறது. மேற்படி நிலைகள் சிறப்பாக பேணப்படும் பண்ணைகளில் கறவை மாடுகள் வருடாந்தம் தவறாது கன்றுகளை ஈனும்.

கறவை மாடுகள் 285-295 நாட்கள் (அண்ணளவாக பத்து மாதங்கள்) கர்ப்பக் காலத்தை கொண்டவை. இந்தக் காலம் முடிந்து கன்றை ஈனும் மாடு மறுபடி அண்ணளவாக 2 மாதத்துக்குள் சினைப்பட வேண்டும். இதுதான் அந்த வருடத்துக்கு ஒரு கன்று எனும் எண்ணக்கரு. இது அவ்வளவு இலகுவாக அடையக்கூடிய விடயமல்ல. கறவை மாடு வளர்ப்பின் சகல முகாமைத்துவ விடயங்களும் ஒழுங்காக ஒருங்கமைக்கப்பட வேண்டும்.

கறவை மாடுகள் சினைப்பட்டு கன்றீனும் போதுதான் பாலுற்பத்தியும் நிகழும். அந்தப் பாலை விற்றால் தான் வருமானம் வரும். மாடுகள் சினைப்படாத போது பாலும் கிடைக்காது. வருமானமும் வராது. அத்துடன் சினைப்படாமல் பண்ணைகளில் வருடக்கணக்கில் இருக்கும் மாடுகள் தேவையற்ற சுமையாகும்.


அவை தீவனத்தையும் இடத்தையும் பிடித்துக் கொண்டிருக்கும். இலங்கையில் உள்ள இனப்பெருக்கத் தகுதியுள்ள (Breedable cows) கறவை மாடுகளில் கணிசமானவை வருடந்தோறும் கன்றுகளை ஈன மாட்டாதவை. பல மாடுகள் சில வருடங்களுக்கு ஒரு தடவைதான் சினைப்படுபவை. இது பொருளாதார ரீதியாக அந்தப் பண்ணைகளுக்கு பாதிப்பானது. நாட்டின் பாலுற்பத்திக்கும் பங்களிக்காதவை.



### ஏன் வருடாந்தம் கன்றுகள் கிடைப்பதில்லை?

1.மாடுகளில் ஏற்படும் நோய்கள்- கன்று வீச்சு நோய் (Brucellosis) போன்ற இனப்பெருக்கம் சார்ந்த நோய்கள் மாடுகளில் கருச்சிதைவை ஏற்படுத்துகின்றன. கருப்பை வெளித் தள்ளல் (Uterine prolapse) . நஞ்சுக்கொடி போடாமை (Retained placenta). கன்றீண சிரமப்பட்டு நிகழ்த்தப்படும் சிகிச்சைகளும் (Dystocia and C- section) அடுத்த முறைச் சினைப்படுத்தலை தாமதப் படுத்துகின்றன. பால்க் காய்ச்சல் (Milk fever). கீற்றோசிஸ் (Ketosis) போன்ற உற்பத்தி நோய்கள் (Productive diseases] மாட்டின் சினைப்படு தன்மையை பாதிக்கின்றன.

2. போசணைக் குறைபாடு (Nutritional deficiencies) - இலங்கையில் வருடம் முழுவதும் சீரான புல் வகை உணவு கிடைப்பதில்லை. குறிப்பாக வறட்சி மற்றும் அதீத மழைக் காலங்களில். இதனால் தேவையான ஊட்டச்சத்துக்கள் கிடைப்பதில்லை. மாடுகளின் இனப்பெருக்க மேம்பாட்டுக்கு பல நுண் ஊட்டச்சத்துக்கள் ( Micro Nutrients) அவசியமாகின்றன.




அவை கிடைக்காத போது கருச்சிதைவு ஏற்படுவதுடன் இனப்பெருக்கத்துக்கு அவசியமான ஓமோன்கள் கிடைக்காமல் போகின்றன. ஒரு கன்றைச் சுமப்பதற்கு அவசியமான உடல் நிலைச் சுட்டியை (Body conditional score- BCS) அடைய முடியாத மாடுகளில் அடுத்த முறை சினைப்படுவது தாமதமடைகிறது. உடல் நிலைச் சுட்டி போசணையுடன். நேரடியாக தொடர்புபட்டது.

3.சினை அறிகுறிகள் தெளிவாக தெரியாமையும் பண்ணையாளர்கள் சரியாக அடையாளப்படுத்தாமையும்.- பல மாடுகள் சினை அறிகுறிகளை தெளிவாக காட்டுவதில்லை (silent heat]. பண்ணையாளர்களும் சினை அறிகுறிகளை தெளிவாக காண்பதில்லை (Missed heat]. இதனால் காலம் தாழ்த்தித்தான் சினைப்படுத்து கின்றனர்.

4. செயற்கை முறைச் சினைப்படுத்தலின் குறைபாடு- செயற்கை முறைச் சினைப்படுத்துனர்களின் செயற்பாடுகள் சகல இடங்களிலும் சரியாக கிடைப்பதில்லை. குறிப்பாக கிராமங்களில். அண்மைக்காலத்தில் சினைப்படுத்துனர்களின் தட்டுப்பாடு அதிகமாகவே உள்ளது. இதனால் ஏற்கனவே உள்ள சினைப்படுத்துனர்களுக்கு அதிக வேலைப்பளு ஏற்பட்டு பலரின் மாடுகளின் சினைத் தருணங்கள் தவறவிடப்படுகின்றன.

5. குடற்புழுத் தாக்கம் - குடற்புழுக்கள் கறவை மாடுகளின் கணிசமான ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுகின்றன. இதனால் இனப்பெருக்கத்துக்கு கிடைக்க வேண்டிய முக்கிய ஊட்டச்சத்துகள் கிடைப்பதில்லை.

6.காலநிலை மாறுபாடுகள் - அண்மைக்காலத்தில் உலக வெப்ப முறுதலின் [Global warming] காரணமாக கறவை மாடுகளின் ஓமோன்களின் செயற்பாடுகள் பாதிக்கப் படுவதுடன் அதிகளவில் ஆரம்ப நிலைக் கருச்சிதைவுக்கும் (Early embryonic death) உள்ளாகின்றன.



### இதனைச் சீர் செய்வது எவ்வாறு?

1. நோய்களுக்கான சிகிச்சைகளும் முறையான முகாமைத்துவமும்- இனப்பெருக்க மற்றும் ஏனைய நோய்களுக்கு கால்நடை வைத்தியரின் ஆலோசனையை பெறுவதுடன் சிகிச்சையளிக்கவும் வேண்டும். நீண்ட காலமாக சினைப்படாத மாடுகளுக்கு ஓமோன்கள் மூலமான சினைப் பருவ ஒருங்கிணைத்தலைச் (estrus synchronization) செய்யலாம். உற்பத்தி நோய்களுக்கு ஊட்டச்சத்து மேம்பாடு அவசியமாகிறது.



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

2.வருடமுழுதும் சீரான சமச்சீர் உணவுகளை கிடைக்கும் வகை செய்தல்- தீவனப் பயிர்களை ஊறுகாய்ப்புல் [Silage/Hay] செய்வது மூலம் சேமித்து தட்டுப்பாடான காலத்தில் வழங்கலாம். தீவன கலவைகளை (Mineral supplements) வழங்கலாம். வைக்கோல் போன்றவற்றை சேமித்து போசணைச் செறிவூட்டி வழங்கலாம். வைக்கோல் போசணைப் பெறுமானம் குறைந்த போதும் யூரியா போன்றவற்றால் செறிவூட்டுவது மூலம் போசணைப் பெறுமதியை அதிகரிக்க முடியும். சூழலில் கிடைக்கும் பனை ஓலை , பாதுகாப்பான வீட்டு உணவுக் கழிவுகளை வழங்க முடியும்.

3.சினை அறிகுறிகளை தவற விடாமல் அவதானித்து சினைப் படுத்தல்- காலை, மாலை என மாடுகளை அவதானித்தால்.சினைப் பருவ அறிகுறி தென்படும் காலங்களை எழுதி வைப்பதன் [ Proper record keeping] மூலம் அடுத்த அறிகுறிக் காலத்தை அனுமானிக்க முடியும்.

4.செயற்கை முறைச் சினைப்படுத்தலின் வீச்சை அதிகரிப்பதுடன் இயற்கை முறைக்குரிய ஏற்பாடுகளையும் செய்தல். அரச மற்றும் தனியார் சினைப்படுத்துனர்களை பணிக்கு அதிகளவில் அமர்த்துதல். நல்லினக் காளைகளை இயற்கை முறைச் சினைப்படுத்துதலுக்ககாக பயன்படுத்தல்.

5.முறையாக குடற்புழு நீக்கம் செய்தல்.

6.காலநிலைக்கு ஏற்ற மாட்டு இனாங்களைத் தெரிவு செய்வதுடன் பாதுகாப்பான கொட்டகைகளை அமைத்தலும்.

இப்படியான செயற்பாடுகளைச் செய்வது மூலம் வருடத்துக்கு ஒரு கன்றை பெற முடியும் என்பதுடன் பண்ணைகளின் தொடர்ச்சியான வருமானத்தை உறுதி செய்யவும் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## மகாராஷ்டிராவில் இடிந்து வீழ்ந்த 4 மாடி கட்டடம் - 15 பேர் உயிரிழப்பு!



(டில்லி)

மகாராஷ்டிராவின் பால்கர் மாவட்டத்தின் விரார் பகுதியில் அமைந்துள்ள நான்கு மாடி கட்டடத்தின் ஒரு பகுதி கடந்த புதன் கிழமை இடிந்து வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் குறைந்தது 15 பேர் உயிரிழந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விரார் பகுதியில் உள்ள நாராங்கி வீதியில் அமைந்துள்ள நான்கு மாடி ரமாபாய் அடுக்குமாடி குடியிருப்பின் பின்புறம், அதிகாலை 12.05 மணியளவில் அருகிலுள்ள ஒரு கட்டடத்தின் மீது வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

இதையடுத்து உயிரிழந்தவர்களின் சில உடல்கள் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டன.

ஏனையவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போது இறந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டடத்தின் இடிபாடுகளுக்குள் இன்னும் சிலர் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

தேசிய பேரிடர் மீட்புப் படையினரின் தேடுதல் பணி இன்னும் தொடர்வதாக கூறியுள்ளனர்.

இந்தக் கட்டடம் முதலில் 2008 மற்றும் 2009இற்கு இடையில் 54 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் நான்கு வர்த்தக நிலையங்களுக்காக கட்டப்பட்டது.

இருப்பினும் அதன் சில பகுதிகள் 2012 இல் மாற்றியமைக்கப்பட்டதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். (நி)

# பேச்சுவார்த்தைக்கு
# அழைக்கிறது ஐரே

**(பிரஸல்ஸ்) •••••••••••••• உக்ரைனுக்கு எதிரான போரை நிறுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைக்கு ரஷ்யா ஜனாதிபதி புடின் கட்டாயம் வரவேண்டும் என்று ஐரோப்பிய யூனியன் தலைவர் ஊர்சுலா வாண்டர் லியன் வலியுறுத்தியுள்ளார்.**


ரஷ்யா - உக்ரைன் நாடுகளுக்கு இடையேயான போர் மூன்றரை ஆண்டுகளை கடந்து நடந்து வருகிறது. இந்தப் போரை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இருப்பினும், உக்ரைன் மீது ரஷ்ய படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இது உலக நாடுகளை கவலைக்குள்ளாக்கியுள்ளது.

இந்த நிலையில், போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு ரஷ்யா ஜனாதிபதி புடின் கட்டாயம் வர வேண்டும் என்று ஐரோப்பிய யூனியன் தலைவர் ஊர்சுலா வாண்டர் லியன் வலியுறுத்தி



## தென்கொரியாவின் முன்னாள் முதல் பெண்மணி கியோன் ஹீ மீது இலஞ்சக் குற்றச்சாட்டு



(சியோல்)

தென்கொரியாவின் பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலின் மனைவி கிம் கியோன் ஹீ மீது இலஞ்சம் மற்றும் பிற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக நேற்று வெள்ளிக்கிழமை விசேட சட்டதரணி குழு தெரிவித்துள்ளது.

நாட்டின் இராணுவச் சட்ட நெருக்கடி மற்றும் ஒரு காலத்தில் சக்திவாய்ந்த தம்பதியினர் சம்பந்தப்பட்ட ஊழல்கள் குறித்து விரிவான விசாரணை நடைபெற்று வரும் நிலையில், யூன் மற்றும் கிம் இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர்.

டிசம்பரில் இராணுவச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான தவறான முயற்சியில் ஈடுபட்டதாக ஏப்ரல் மாதம் பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கிளர்ச்சி உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் யூன் ஏற்கனவே விசாரணையில் உள்ளார்.

யூன் பதவியில் இருந்து நீக்கப்பட்டு ஜனாதிபதி லீ ஜே மியுங் பதவியேற்ற பின்னர் நியமிக்கப்பட்ட விசேட சட்டதரணிகளால் இந்த ஜோடி தனித்தனியாக விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறது.

தென்கொரியாவில் முன்னாள் முதல் பெண்மணி ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்படுவது இதுவே முதல் தடவை ஆகும். (நி)

## காசா மக்கள
## இஸ்ரேல் எ

(ஜெருசலேம்)


காசா நகரின் 80 வீதத்திற்கும் அதிகமான பகுதிகள் தங்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் வந்துள்ளதால், காசா நகர குடிமக்கள் வெளியேற வேண்டுமென இஸ்ரேஸ் எச்சரித்துள்ளது.

இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினை என்பது பல தசாப்தங்களாக நீடித்து வரும் நிலையில், காசா பகுதியை ஆளும் ஹமாஸ் அமைப்பினர் அக்டோபர், 2023இல் இஸ்ரேல் மீது நடத்திய திடீர் தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டதுடன், 252 பேர் பிணையக் கைதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ... புடின் வரவேண்டும்
## ...ரோப்பிய யூனியன்




...யுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள எக்ஸ் தளப்பதிவில் கீவில் உள்ள ஐரோப்பிய யூனியன் அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து, உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புடன் நான் பேசினேன்.

புடின் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும்.

நம்பகமான மற்றும் உறுதியான பாதுகாப்பு உத்தரவாதங்கள் மூலம் உக்ரைனுக்கு நீதியான மற்றும் நீடித்த அமைதியை நாம் உறுதிப்படுத்த வேண்டும். ஐரோப்பா அதன் முழு பங்கை வழங்கும் என அவர் தெரிவித்தார். (நி)

## இந்தியப் பிரதமர் மோடிக்கு ஜப்பானில் உற்சாக வரவேற்பு



(டோக்கியோ)

இரண்டு நாள் பயணமாக ஜப்பானுக்கு சென்ற பிரதமர் மோடிக்கு டோக்கியோ விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரண்டு நாள் அரசு முறை பயணமாக பிரதமர் மோடி ஜப்பானுக்கு சென்றுள்ளார்.

ஜப்பானில் நடக்கும் 15ஆவது வருடாந்திர உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார். இந்த மாநாட்டில் இருநாட்டு உறவு, வர்த்தகம், பாதுகாப்பு, பொருளாதாரம், தொழில்நுட்பம் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் விவாதிக்க உள்ளனர்.

ஜப்பான் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் மோடி ஆகஸ்ட் 31ஆம் திகதி சீனா செல்கிறார். அங்கு ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். அங்கு சீனா, ரஷ்யா ஜனாதிபதிகளை சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: டோக்கியோவில் தரையிறங்கினேன்.

இந்தியாவும், ஜப்பானும் தங்களது உறவுகளை வலுப்படுத்தி வரும் நிலையில், இந்தப் பயணத்தின் போது பிரதமர் இஷிபா மற்றும் பிறருடன் தலைவர்கள் உடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை நான் எதிர்நோக்குகிறேன்.

மேலும் உறவை வலுப்படுத்தவும் இந்த பயணம் ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார். (நி)

## ...களை வெளியேறுமாறு
## ... எச்சரிக்கை விடுப்பு!

...களாகவும் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இதற்குப் பதிலடியாக காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. இடையில் பேச்சுவார்த்தை ஏற்பட்டு சில நாட்கள் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தாலும், மறுபடியும் அங்கு இன்றுவரை போர் தொடர்கிறது.

இதுவரை அங்கு 62,000இற்கும் மேற்பட்ட மக்கள் பலியாகி உள்ளனர். இதற்கிடையே, ஹமாஸ் வசம் உள்ள தங்கள் நாட்டு பிணைக்கைதிகள் 58 பேர் விடுவிக்கப்படும் வரை தாக்குதல்கள் தொடரும் என எச்சரித்துள்ள இஸ்ரேல், காசாவை தங்கள் முழு கட்டுப்பாட்டில் கொண்டு வரவும் திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில், காசா நகரின் 80 வீதத்திற்கும் அதிகமான பகுதிகள் தங்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் வந்துள்ளதால், காசா நகர குடிமக்கள் வெளியேற வேண்டுமென இஸ்ரேஸ் எச்சரித்துள்ளது.

இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் செய்தித் தொடர்பாளர் அவிகாய் அத்ரீ தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், காசா நகர மக்கள், அங்கிருந்து வெளியேறத் தயாராகுமாறு எச்சரித்துள்ளார்.

நகருக்கு வெளியே தெற்குப் பகுதியில் கூடாரம் அமைக்கப்பட்டு, மனிதாபிமான உதவிகள் வழங்கப்படும் என்றும் பதிவிட்டுள்ளார். ஆனால் இந்த நகர்வு, ஏற்கெனவே மோசமாக உள்ள மனிதாபிமான நெருக்கடியை, மேலும் அதிகரிக்கும் என்று சர்வதேச உதவி அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

இதனிடையே, வோஷிங்டனில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் கிதியோன் சா' ஆரை சந்தித்து, போருக்குப் பிந்தைய காசா நிலைமை குறித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். எனினும், இந்தப் பேச்சுவார்த்தையில் பணயக் கைதிகள் குறித்த நிபந்தனை இருக்கக்கூடாது என்று அமெரிக்கா கருதுகிறது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

**பாடசாலை நேரங்களிலும், வாகன நெரிசல் கூடிய நேரங்களிலும் வீதிகளில் கனரக வாகனப் போக்குவரத்தை கட்டுப்படுத்துவது குறித்து பொலிஸார் கவனம் செலுத்தியுள்ளனர்.**

பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் முடிவடையும் நேரங்களில் வீதிகளில் அதிக போக்குவரத்து நெரிசல் இருக்கும் என மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நேரங்களில் கனரக வாகனங்களை ஓட்டுவதால் ஏற்படும் விபத்துக்களைக் குறைக்க இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நெரிசல் நேரங்களில் கனரக வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக எடுக்க வேண்டிய கூடுதல் நடவடிக்கைகள் குறித்து பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதற்கமைய, அமைச்சின் முடிவை தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)


## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்: சதயம்
கி-பா-29 1/4 1 இல் செவ்
உயரம் : 5'7"
தகைமை/தொழில்: BSc, Senior Software Engineer
எதிர்பார்ப்பு: Engineer, IT field
தொ.இ: B/15986

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம் :5'7"
தகைமை/தொழில்-IT, Computer Engineer(Australia)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15988

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம் :5'7"
தகைமை/தொழில்:HND Civil Engineering, TO
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15989

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம் :உத்தரம்
கி-பா- 51 1/2
உயரம்:5'7"
தகைமை/தொழில்: Bsc, Developer Supervisor
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15990

பிறப்பு: 1985- இந்து
நட்சத்திரம் :உத்தரட்டாதி
உயரம்:5'7"
தகைமை/தொழில்: Management, Banker(ஜேர்மன்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/15991

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம் : உத்தரட்டாதி
கி-பா- 6 1/2
உயரம் : 5'5"
தகைமை/தொழில்: Dip in IT, Banker
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15502

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்-மூலம்
7இல்செவ்
கி-பா-15 1/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: CIMA, Senior Manager(pvt)
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15506

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்-அத்தம்
கி.பா -52 ½
உயரம் -5'6"
தகைமை/தொழில்: Diploma Course, Director(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15507

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
7இல் செவ்
கி.பா- 51
உயரம் : 5'
தகைமை/தொழில் -BA, DO
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15508

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்:பூசம்
உயரம் : 5'
தகைமை/தொழில் -Managemant, Accountant(pvt)
எதிர்பார்ப்பு: Engineer,Doctor
தொ.இ: G/15513

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 437



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மூன் உதாரணம்

சந்திரகுப்தர் என்று ஒரு ராஜா இருந்தார். அவரிடம் தலைமை அமைச்சராக இருந்தவர்தான் சாணக்கியர்.

அவர் ஒரு குடிசையிலேதான் இருந்தார்.

அந்த ஊரிலே ஏழைகள் எல்லாம் குளிராலே கஷ்டப்படுகின்றார்கள் என்று கேள்விப்பட்டார் ராஜா.

உடனே என்ன செய்தர் என்றால் நிறைய கம்பளிப் போர்வைகள் வாங்கி கொடுத்தனுப்பினார்.

அந்தப் போர்வைகளையெல்லாம் சாணக்கியருடைய குடிசைக்கு அனுப்பி வைத்தார். எல்லோருக்கும் விநியோகம் செய்யச் சொல்லி!

அதனாலே அந்தப் போர்வைகள் எல்லாம் சாணக்கியரின் குடிசைக்குள்ளே ஒரு பக்கமாகக் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் விநியோகம் செய்யவில்லை.

இந்த சமயம் பார்த்து அந்த ஊரிலே இருந்த சில திருடர்கள் யோசனை செய்தார்கள்.

"ராஜா கொடுத்தனுப்பிய கம்பளிப் போர்வைகள் எல்லாம் சாணக்கியர் குடிசையிலே தான் இருக்கும். இன்று இரவு எல்லோரும் தூங்கியதற்கு பின் அங்கே போனோமென்றால் எடுத்துக் கொண்டு வந்துவிடலாம் வேறு ஊருக்குப் போய் விற்றுப் பிழைத்துக் கொள்ளலாம்

இதுதான் அந்தத் திருடர்கள் போட்ட திட்டம்

அந்தத் திட்டப்பிரகாரமே நடு ராத்திரியிலே கிளம்பினார்கள் மெதுவாக சாணக்கியர் குடிசைக்குப் போனார்கள். சத்தம் போடாமல் உள்ளே நுழைந்தார்கள்.

ஒருபக்கம் கம்பளியெல்லாம் குவித்து இருக்கின்றது. இன்னொரு பக்கம் சாணக்கியரும் அவர் தாயாரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

தரையிலே ஒரு பாயைப் போட்டு கிழிந்து போன ஒருபழைய கம்பளித் துணியாலே போர்த்திக் கொண்டு தூங்கினார்கள்.

கம்பளிமுழுவதும் கிழிசல் மயம்! அதனாலே குளிரிலே அவர்கள் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது.

திருடர்களுக்கு இதைப் பார்த்ததும் ஆச்சரியம். என்ன இது- ஒரு பக்கம் இவ்வளவு புதுக்கம்பளிகள் குவிந்து இருக்கின்றது.அதையெல்லாம் விட்டுவிட்டு கிழிந்து போன ஒரு கந்தல் கம்பளியைப் போர்த்திக்கொண்டு கஷ்டப்படுகிறார்களே" என்கின்ற ஆச்சரியம்!

உடனே அந்தத் திருடர்கள் வந்த காரியத்தையும் விட்டுவிட்டு சாணக்கியரை எழுப்பினார்கள்

"ஐயா. கொஞ்சம் எழுந்திரியுங்கள் என்றார்கள்.

அவர் எழுந்து உட்கார்ந்து இவர்களைப் பார்த்தார். ஒன்றும் புரியாமல்!

"ஐயா- நாங்கள் திருடர்கள். நாங்கள் கம்பளி திருடுவதற்காகத்தான் இங்கே வந்தோம். ஆனா உங்க நிலையைப் பார்த்ததும் எங்களுக்கு ஒரு சந்தேகம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்பதற்காக தான் எழுப்பினோம்! என்றார்கள்.

"என்ன சந்தேகம்?"என்றார் சாணக்கியர்

உங்க குடிசைக்குள்ளே ஒரு பக்கம் நல்ல கம்பளி குவிந்து இருக்கின்றது. அதை விட்டுவிட்டு ஓட்டை கம்பளியாலே உடம்பை மூடிக்கொண்டு தூங்குகின்றீர்களே. எதற்காக இப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டார்கள்.

அந்தக் கம்பளியை நான் எடுத்தேன் என்றால நானும் உங்களை மாதிரித்தானே என்றார்.

இவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.சாணக்கியர் விபரமாகச் சொன்னார்.

நான் வைத்திருக்கிறது கிழிந்து போன கம்பளி. இது மாதிரி கிழிந்துபோன கம்பளி கூட இல்லாத ஏழை எளிய மக்களுக்கு கொடுப்பதற்காக ராஜா கொடுத்தனுப்பியிருக்கின்ற கம்பளிகள் அதெல்லாம்.

அந்த ஏழைகள்தான் இந்தப் புதுக் கம்பளிகளுக்கு சொந்தக்காரர்கள். அதை எடுத்து நான் போர்த்திக்கொண்டேன் என்றால் நானும் திருடன் தான் . அதனாலே அதை நான் எடுக்க மாட்டேன்! என்றார்.

திருடர்கள் மனதிலே முள்ளாலே குத்தியது மாதிரி இருந்தது. இனி திருடவே மாட்டோம் என்று சொல்லி வந்ததற்காக மன்னிப்புக் கேட்டுவிட்டு அவர்கள். போய்விட்டார்கள்.

உயர்ந்த பதவியிலே இருக்கிறவர்களுடைய முன் உதாரணம்தான் அடிமட்டத்திலே உள்ளவங்கள் மனதை தூய்மைப்படுத்ததும்.

இந்தக் காலம் அப்படியா இருக்கு?


ஒருத்தர் வீட்டுலே திருட்டு போய்விட்டது. பறி கொடுத்தவர் ரொம்ப கோபமாக இருந்தார். பரவாயில்லை விடுங்கள் எப்படியும் கண்டுபிடித்து விடலாம் என்று பக்கத்திலே இருந்தவர்கள் ஆறுதல் சொன்னார்கள். இவர் மறுபடியும் கோபமாக பேசினார்.

என் வீட்டிலே இருந்த நகை திருட்டுப் போனதனாலே நான் கோபப்படவில்லை சார்! அந்தத் திருடன் செய்த இன்னொரு காரியம்தான் எனக்குக் கோபத்தை உண்டாக்கிவிட்டுது!என்றார். என்ன செய்தான் என்று கேட்டார்கள்.

நகை, பணத்தையெல்லாம் சுருட்டி எடுத்து கட்டிக்கொண்டு புறப்படும் போது அவன் என்னை தட்டி எழுப்பி. கதவை தாழ்ப்பாள் போடுங்கள் திருட்டுப் பயம் ஜாஸ்தியா இருக்கு! என்று சொல்லிவிட்டுப் போறான் சார்!" என்றார் ஆவேசமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களின் ‘மாறும் நிழல்’ திரைப்பட விமர்சனம்






“வரணியான்”
கந்தசாமி ஸ்ரீதரன்
ஓய்வுநிலை அதிபர்.

இந்த விமர்சனத்தை இங்கே ஏன் ? என்ற கேள்விக்கான என் பதில்.

அகில இலங்கை பாடசாலைகள் வரலாற்றில் முழுமையாக மாணவர்களின் சுய உருவாக்கத்தில் வெளியிடப்படும் முதலாவது முழு நீளத் திரைப்படம் என்ற பெருமைபெற்றுள்ள இந்தப் படைப்பை ஒரு தடவையாவது அருந்துங்கள் சுவைக்கு நான் உத்தரவாதம். அப்படிப் பார்க்காதீர்கள் நான் ஒரு ரசிகனாக மட்டுமே .. திரைப்படம் சார்ந்த ஒவ்வொரு துறைசார் வல்லுநர்களும் தங்கள் ஆக்கபூர்வ விமர்சனங்களை இந்தக் குழந்தைகளுக்கு வழங்குங்கள். பாவம் அவர்கள் பசி, தாகத்துடன் இருக்கிறார்கள்.
உங்களுடைய கவள சாதமும், குவளை நீரும் கூட அவர்களைத் தெம்படையச் செய்யும்.பல எமது புலம்சார் படைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. அவைகள் ஒன்றுக்கொன்று சளைத்தவைகள் அல்ல. இருப்பினும் மாணவர்கள் இவர்களுக்கு ஊக்கமும் ஆதரவும் கொடுக்க வேண்டியது எமது தற்கால தலையாய கடமையென்று நான் கருதுகின்றேன்.

கடந்த 24ம் திகதி ஒகஸ்ட் 2025 ஞாயிற்றுக்கிழமை மாலைப்பொழுது, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி “குமாரசுவாமி மண்டபம்” பழையமாணவனின் பெற்றோர் என்ற ரீதியில் எனக்கும் ஒரு அழைப்பு. இதுஎனக்குக் கிடைத்த ஒரு பாக்கியமாகக்கூடக் கருதத் தோன்றுகிறது.

அன்றைய நாளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்களினால் வெளியிடப்படும் திரைப்படம் ஒன்றிற்காகப் பார்வையாளராகச் சென்றிருந்தேன்.

திரை ஒளிர முன்பு சிரேஷ்ட மாணவத் தலைவனின் முன்னுரை, இருக்கையில் சாய்ந்திருந்த என்னை சற்றே நிமிர்ந் திருக்கச்செய்தது. ஆரம்பக்காட்சி உலுப்பல் கலந்த திகைப்பூட்டலுடன் தொடங்கியது.

நாற்காலி ஒன்று விழ மனப் பதை பதைப்புடன் கொஞ்சம் இன்னும் நிமிர வைத்துச்சென்ற கறுப்பு வெள்ளைக்காட்சி நிறைவில், உயர் தொழில்நுட்பத்துடன் விழியகலவைத்த எழுத்தோட்டம். தொடர்ந்து ஏறத்தாழ 83 நிமிடங்கள், எம்மை எல்லாம் ஆச்சரியத்துடன் புழகாங்கித மடையவைத்த மயிர்க்கூச்செறிவுடன் கூடிய பெருமித நிமிடங்கள் என்பது நிச்சயமாக மிகை வர்ணனை அல்ல.

சாதாரண ஒரு மாணவ அபிலாசை, அதை அடைய அவனின் ஆவலுடன் கூடிய எத்தனிப்புகள், தடைகள், அவமானங்கள், அனுபவங்கள் எனத் தொடர்ந்து …முடிவு?

இதுவல்ல. அந்த மணித் துளிகள் ஏற்படுத்திய பிரமிப்புக்களே என்னைப் பேனா தூக்க வைத்தன.

கரு, திரைக்கதை, வசனம், நெறியாள்கை, இயக்கம், பின்னணி இசை, பாடல், நடிப்பு, நகைச்சுவை, படப்பிடிப்பு, Location Selection போன்ற திரைப்பட உருவாக்க மூலங்கள் யாவும், இளைஞு பராயத்திற்குள் நுழையவிருக்கும் குழந்தைகளின் சுய ஆக்கம் என்பதே பேராச்சரியம்.

**என்னை ஆச்சரியப்பட வைத்தவை..**

தொடக்கம் முதல் நிறைவு வரை ‘அடுத்து என்ன?’ என்ற ஆவலுடன் வைத்திருந்த உத்தி, எடுத்த கருப்பொருள் என்ற எல்லை தாண்டாத நடிப்பு, வசனங்கள், நகைச் சுவை, பாடல் போன்றவற்றில் செலுத்திய அக்கறை, தேவையற்ற சலிப் படைய வைக்கக் கூடிய எந்தக் காட்சிகளோ வசனங்களோ இல்லாமல் புடைத்தெடுத்த ஆற்றல், யாழ்ப்பாணத் தமிழ் (Slang) திரைப்படத்திற்குப் பொருத்தமில்லை என்ற எண்ணக்கரு உடைத்தெறியப்பட்டுள்ளது., ‘மத நல்லிணக்கம்’ என்ற பாரிய விவாத விடயத்தை நாசூக்காகச் சொல்லிய பாங்கு , தலைமைத்துவப் பண்புகள், கோட்பாடு களைப் போகிற போக்கில் யாரும் விளங்கக்கூடியதாகக் கூறியுள்ள திறமை, “திரைப்படக் கல்லூரியிலே பலவருடம் பயின்று இயக்குநர்களுக்கு இசையமைப் பாளர்களுக்கு மற்றும் திரைப் பிரபல்யங்களுக்கெல்லாம் எடுபிடிகளாக இருந்து துணையாக உதவியாக கருவி காவுபவர்களாக திரிந்து தான் நாங்கள் திரையில் தெரிந் தோம்” என்று நேர் காணல்களில் சுயம் சொல்லும் பல முன்னணிகள். இங்கே எதுவுமே இல் லாமல் தம்மைத்தாமே

செதுக்கியுள்ள இவர்கள் எம்மை ஒரு கணம் நின்று திரும்பிப் பார்க்க வைக் கிறார்கள்.இவைதானோ என்றால்.

கலைந்த கேசம், கட்டம் போட்ட மேல் பொத்தான் கழற்றிய ‘சேட்’ அதனூடே ஒழித்திருக்கும் கருநூல், பிரசங்கம். வாழ்வை முடிக்கப்போகும் இறுதிக் கணத்தில் தடுத்து நிறுத்தும் தற்கொடை தாங்கிய சுவரொட்டி. அவர்கள் இருக்கும் காலத்தில் பெருவிரல் நனைத்திருந்த சிசுக்களுக்கு எப்படி இப்படிச் சிலிர்ப்படைய வைக்கும் சிந்தனைகள்..? ஆச்சரியம்..

இந்த அளப்பெரிய கைங்கரியத்துக் காக இரவு, பகலாக உழைத்த பிள்ளை கள், ஒத்தாசை வழங்கிய பெற்றோர், பழைய மாணவர்கள், அதிபர், ஆசிரி யர்கள், பாடசாலைச் சமூகம் யாவரும் பாராட்டுக்குரியவர்களே.

# சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகத்திற்கு 20 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகம் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. பருத்தித் துறைப் பகுதியில் அமைந்துள்ள உண வகத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீரினைக் கழிவு நீர்த்தொட்டியிற்குள் அகற்றாது வெளிச்சூழலுக்கு அப்புறப் படுத்தியமை, உணவகத்தில் கழிவுகள் திரள அனுமதித்தமை, உடல் நலத் தகுதியை உறுதிப்படுத்தும் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் உணவினை கையாண்டமை உள்ளிட்ட குற்றங்கள் சுமத்தப்பட்டு, உணவக உரிமையாள ருக்கு எதிராக பருத்தித்துறை நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகரால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது

குறித்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது , உரிமையாளர் தன் மீதான குற்றங்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து, உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று, 20 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து தீர்ப்பளித் துள்ளது. (8-33)

# இராசிபலன்

30.08.2025
ஆவணி 14 ,சனிக்கிழமை
சப்தமி முன்னிரவு 9.21 மணி வரை

விசாகம் பிற்பகல் 2.22 மணிவரை
சுப நேரம் 3.05 -4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

சந்திராஷ்டமம்
ரேவதி, அச்சுவினி.

**வளவன்**


மேஷம்

வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக் கறை காட்டும் சூழ்நிலை உரு வாகும்.


கடகம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.


துலாம்

உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.


மகரம்

பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற் றம் காணும் நாள்.


ரிஷபம்

ஆடம்பரப் பொருட் களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுற் றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வெளியூர்த் தொடர் புகள் அனுகூலம் தரும், காரிய அனுகூலமுண்டு.


சிம்மம்

உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், வெளி யூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.


விருச்சிகம்

வழிபாடு குதூகலம் தரும், பக்கு வமாகப்பேசி காரியம் சாதித்துக் கொள் வீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


கும்பம்

பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.


மிதுனம்

ஆரோக்கியம் சம்பந்தப் பட்ட வகையில் நன்மை யுண்டு, வம்பு வழக்கு களைச் சமாளித்து வளம் காணும் நாள், வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கன்னி

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்ப டலாம், சுய முயற்சி யின் மூலம் சுகம் காணும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.


தனுசு

திட்டமிட்ட காரிய மொன்றில் திசை திருப்பங்கள் ஏற்ப டலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டு வீர்கள், ஊர்மாற்றம், இடமாற் றம் என்பன இடம்பெறலாம்.


மீனம்

அன்பால் சாதித்துக் காட்டும் நாள், எதிர் பார்ப்புக்கள் நிறை வேறும் வாய்ப்புண்டு, தடைப்பட்ட காரியங்க ளில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

நீ புகழை வெறுத்தால் புகழ் உன்னைத் தேடி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர்

856





இவ்வாறு முதன்மந்திரி கூறியபோது, ஒரு பெண் குரல் "அந்தச் சண்டாளன் தலையில் மரம் மட்டும் தானா விழுந்தது? இடி விழவில்லையா?" என்று ஆத்திரத்துடன் கூறியது கேட்டது.

முதன்மந்திரி அநிருத்தர் அளவிலாத வியப்புடன் பூங்குழலியை நோக்கினார். அவளைப் பார்த்துக் கொண்டே "திருமலை! இப்போது பேசியவள் இந்தப் பெண்தானா?" என்றார்.

"ஆம், ஐயா! அப்படித் தான் தோன்றியது."

"இது என்ன விந்தை? செவிடுக்குக் காது கேட்குமா? ஊமையும் பேசுமா?" என்றார் அநிருத்தர்.

"செவிட்டுக்குக் காது கேட்பதும், ஊமை பேசுவதும் மிகவும் விந்தையான காரியந்தான். ஆனால் சர்வசக்தி வாய்ந்த விஷ்ணு மூர்த்தியின் பக்தராகிய தாங்கள் மனது வைத்தால் எந்த அற்புதம் தான் நடக்காது? ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளியிருப்பது என்னவென்றால்.."

"போதும்! ஆழ்வார்களை இப்போது இங்கே இழுத்துத் தொந்தரவு செய்யாதே! இது விஷ்ணு பகவானின் கருணையினால் நடந்தது அல்ல. ஏதோ தவறு நடந்திருக்கிறது. இந்தப் பெண் நம்மை ஏமாற்றியிருக்கிறாள். இவள் யார்? இவளுடைய நோக்கம் என்ன? எதற்காக இவள் இத்தனை நேரமும் செவிட்டு ஊமை போல நடித்தாள்?"

"குருதேவரே! இந்தப் பெண்ணையே கேட்டு விடலாமே?"

"அப்பனே! உன் முகத்தில் தவழும் புன்னகையைப் பார்த்தால், உனக்கு ஒருவேளை தெரிந்திருக்கக்கூடுமோ என்று தோன்றுகிறது. சரி! இவளையே கேட்டு விடுகிறேன் பெண்ணே! நீ செவிடு இல்லையா? நான் பேசுவது உனக்குக் காது கேட்கிறதா?"

"ஐயா! நான் செவிடாயிருக்கக் கூடாதா என்று சில சமயம் விரும்பியதுண்டு. ஆனால் எனக்குக் காது கேட்பது பற்றி இப்போது சந்தோஷப்படுகிறேன். அந்தச் சண்டாளன் வைத்தியர் மகன் தலையில் மரம் ஒடிந்து விழுந்த செய்தியைக் கேட்டேன் அல்லவா? சுவாமி! அவன் செத்து ஒழிந்தானா?" என்றாள் பூங்குழலி.

"ஆகா! உனக்குக் காது கேட்கிறது. பேசவும் பேசுகிறாய் நீ ஊமை அல்ல!" என்றார் அநிருத்தர்.

"நிச்சயமாய் இந்தப் பெண் ஊமை இல்லை!" என்றான் சீடன்.

"ஆகா! நான் ஊமையில்லை என்பதைக் கண்டுபிடித்து விட்டீர்களே! சோழ சாம்ராஜ்யத்திலேயே மிக்க அறிவாளி முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் என்று நான் கேள்விப்பட்டது சரிதான்!" என்றாள் பூங்குழலி.


"பெண்ணே! என்னைப் பரிகாசமா செய்கிறாய்! ஜாக்கிரதை! நீ ஊமையில்லாவிட்டால் நேற்று இரவு இங்கு வந்ததிலிருந்து பேசாமலிருந்தது ஏன்? ஊமை போல் நடித்தது ஏன்? உண்மையைச் சொல்லு!" என்று கேட்டார் முதன் மந்திரி அநிருத்தப்பிரம்மாதிராயர். "ஐயா! நேற்றிரவு இங்கு நான் வந்து சேரும் வரையில் பேசத் தெரிந்தவளாக இருந்தேன். என்னை 'வாயாடி' என்று கூடச் சொல்வதுண்டு.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ராமுவின் துப்பறியும் மூளை



(நேற்றைய தொடர்ச்சி)

"ராமு" கணபதியப்பனின் ஒரே பையன். அருகில் உள்ள பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கிறான். நல்ல புத்திசாலி. அவ்வப்பொழுது அப்பாவுக்குத் துணையாக கடை கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொள்வான்.

அப்பா கொஞ்ச நாட்களாக யோசனையில் இருப்பதைப் பார்த்த ராமு அப்பாவிடம் "என்னப்பா எப்ப பார்த்தாலும் யோசனையாகவே இருக்கிறீர்கள்? கணபதியப்பன் ராமுவிடம் கொஞ்ச நாட்களாகவே கடையின் எண்ணெய் அளவு குறைந்து கொண்டே வருகி றது.

என் முன்னால் தான் எல்லோரும் வேலை செய்கிறார்கள் அப்புறம் எப்படி எண்ணெய் குறையும் என்று தெரியவில்லை. ராமு யோசித்தான். நாளைக்கு எனக்கு ஸ்கூல் லீவுதான், கடைக்கு நானும் வருகின் றேன். அப்புறம் பார்க் கலாம் என்று அப்பாவிடம் சொன்னான். மறு நாள் இவன் அப்பாவுக்கு முன்னால் கடைக்குச் சென்ற போது புதி தாகச் சேர்ந்தவர் கடையில் எண்ணெய் டப்பாக்களில் வழிந்து கொண்டி ருந்த எண்ணெய் பிசுக்குக்களைத் துடைத்து எடுத்து ஒரு கவரில் போட்டுக் கொண்டிருந்தார்.

"வாங்க தம்பி" என்று சொல்லிவிட்டு இந்த அழுக்கு மூட்டைக் கவரை வெளியில போட்டுவிட்டு வந்து விடுகின்றேன் என்று சொல்லி விட்டு வெளியே கடைக்கு எதிர்ப்புறம் உள்ள குப்பை கூடையில் போட்டு விட்டு வந்தார்.

கடைக்கு கூட்டம் வர ஆரம்பித்து விட்டது. ராமு அப்பாவுடன் பேசிக் கொண்டே வியாபாரத்தையும் பார்த்துக் கொண்டு, வெளியே குப்பை கூடையில் இருந்த பொருட்களை மாநகராட்சி வண்டி வந்து எடுத்துச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவு ஏழு மணிக்கு மேல் கூட்டம் குறைந்தவுடன் கணபதியப்பன் ராமுவை வீட்டுக்கு போக சொல்ல, உங்களுடனே நானும் இருக்கிறேன் என்று சொல்லிவிட்டான். கடை சாத்த அரை மணி நேரம் முன்பு புதிதாக வந்தவர், எல்லாவற்றையும் துடைத்து வைத்து ஒரு பொலித்தீன் பையில் வைத்து விட்டு நான் சென்று வரட்டுமா என்று கேட்டார்.

ராமு நீங்கள் தினமும் சுத்தமாகத் துடைத்து விட்டுத் தான் கிளம் புவீர்களா என்று கேட்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்குப் பகை வெளியுலகத்தில் இல்லை. பயம் எனும் பெயரில் மனதிற்குள்ளேயே இருக்கிறது.
~ பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி அநுர முன்னெடுக்கும் நல்லனவற்றை வரவேற்போம்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாளை மறுதினம் செப்ரெம்பர் முதலாம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்ற ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க; மண்டைதீவில் அமையவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைப்பதுடன், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அமையப் பெற்ற கடவுச்சீட்டு அலுவலகத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

இதுதவிர மயிலிட்டிக்குச் சென்று துறை முகத்துக்கான அடிக்கல்லையும் நாட்டி வைக்கவுள்ளார்.

இதற்கும் மேலாக, செப்ரெம்பர் இரண்டாம் திகதி முல்லைத்தீவு புதுக்குடியிருப்புக்குச் சென்று, தென்னை முக்கோண வலயத்தின் செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைப்பதுடன் வட்டுவாகலில் அமையப் பெறவுள்ள தாம் போதிக்கான அடிக்கல்லையும் நாட்டி வைக்கவுள்ளார்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் ஜனாதிபதி அநுரவின் வடக்குக்கான வருகை மிகப்பெறுமதியான செயற்றிட்டங்களை வட மாகாண மக்களுக்குத் தருவதாக இருப்பது உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் அமைவதென்பது ஒரு பெரும் கொடுப்பனவு. ஆம், யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் அமைவதன் மூலம் மனித மணித்தியாலங்கள் மிச்சப்படுத்தப்படுவதுடன் போக்குவரத்துச் செலவுகளும் மீதப்படுத்தப்படும்.

இவ்வாறே மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு அடிக்கல் நாட்டுவதென்பது தீவகத்துக்குக் கிடைத்த ஒரு பெரும் அதிர்ஷ்டம் எனலாம்.

ஆம் பலரும் தீவகத்தைப் புறந்தள்ளிய வேளையில், இந்த நாட்டின் கிரிக்கெட் அணித் தலைவராக இருந்த அர்ஜுன ரணதுங்கவின் தெரிவாக அமைந்த மண்டைதீவில்; சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை அமைப்பதில் ஜனாதிபதி அநுர கொண்டுள்ள கருசனை தமிழ் மக்களுக்கு வளங்களையும் வசதிகளையும் வழங்க வேண்டும் என்பதில் அவர் கொண்டுள்ள பற்றுறுதியை கோடிட்டுக் காட்டுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, மயிலிட்டி துறைமுகம், வடமாகாணத்துக்கான தென்னை முக்கோண வலய செயற்றிட்டம், வட்டுவாகல் தாம்போதி ஆகியன செயலுருப்பெறுகின்ற போது அதனால் எம் மக்கள் மிகுந்த நன்மை அடைவர்.

ஆக, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னெடுக்கின்ற நல்ல காரியங்களை நாமும் வரவேற்க வேண்டும்.

ஏனெனில் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பதும் தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதென்பதும் இரு சமாந்தரப் பாதைகள் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

### ஜனநாயகத்தை வலுப்படுத்தி

# அரசியல் துன்புறுத்தலை நிறுத்துவதே எமது பயணத்தின் நோக்கம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

ஜனநாயகத்தை வலுப்படுத்துவதும் அரசியல் துன்புறுத்தலை நிறுத்துவதுமே எமது பயணத்தின் நோக்கமாகும். இதன் ஊடாக நாட்டில் ஊழல், மோசடிகளை ஒழிக்கும் செயல்முறைக்கு ஒத்துழைப்பை வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களுடன் நேற்று வெள்ளிக்கிழமை (29) இடம்பெற்ற சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனநாயகத்தை வலுப்படுத்துவதும் அரசியல் துன்புறுத்தலை நிறுத்துவதுமே இந்தப் பயணத்தின் நோக்கமாகும். இதன் ஊடாக நாட்டில் ஊழல், மோசடிகளை ஒழிக்கும் செயல் முறைக்கு ஒத்துழைப்பை வழங்குவோம்.

அதற்கு அப்பால்செயற்படப் போவதில்லை.

ஊழல், மோசடிக்கு எதிராக நாமே முதலில் உயர் நீதிமன்றத்துக்குச் சென்றோம். நாட்டையே வங்குரோத்தடையச் செய்தமைக்கு அடிப்படை உரிமை மீறல் வழக்கினை ஐக்கிய மக்கள் சக்தியே தாக்கல் செய்து தீர்ப்புக்களைப் பெற்றுக் கொண்டது.

ஊழல்வாதிகள் எம்மிடம் இல்லை என்று கூறி அரசாங்கமும் அரச தரப்பினரும் தாம் தூய்மையானவர்கள் எனக் காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி அடக்குமுறை மற்றும் அச்சுறுத்தல்களை தெளிவாகவே எதிர்க்கிறது. அடிப்படை உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. பேச்சுச் சுதந்திரம், அரசியல் செயற்பாட்டுச் சுதந்திரம், மத சுதந்திரம் மற்றும் கலாசார சுதந்திரம் போன்றன காணப்படுகின்றன.

இந்த அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க அனைவரும் ஒன்று பட்டுள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தை தலைமையாகக் கொண்டு ஒன்றிணைந்து பயணிக்க ஒன்று சேருங்கள். பக்கச் சார்பற்ற வேலைத்திட்டம் பொது நன்மை, ஜனநாயகம், மனித மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதை மையமாகக் கொண்டு இந்த பயணம் அமையும் போது சேரக்கூடியவர்கள் இந்தப் பயணத்தில் சேரலாம்.

நாட்டில் சுதந்திர ஊடகத்தைப் பாதுகாக்க வேண்டும். நாம் சமூகத்தின் கருத்துக்களை அறிந்துகொள்வதுடன் அவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் வேண்டும்.

இந்த ஊடகத்துறையின் மீது கை வைக்க அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க நல்லெண்ணத்துடன் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தில் சுதந்திர ஊடகங்களையும் பாதுகாப்போம் என்றார். (ம-7)

### உப்புக்குளம் வெள்ள அனர்த்தத்துக்கு

## நிரந்தரத் தீர்வாக வடிகாலமைப்பை புதிதாக உருவாக்குவதற்குத் திட்டம்

### சாவகச்சேரி நகரசபை தவிசாளர் ஸ்ரீபிரகாஸ்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கோயில் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள உப்புக் கேணியில் சமீப காலமாக ஏற்படும் வெள்ள அனர்த்தத்தினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் அதற்கு நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு சாவகச்சேரி நகரசபையினால் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் வடிகாலமைப்பு மீளப் புதிதாக நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தவிசாளர் ஸ்ரீபிரகாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

எமது நகராட்சி மன்ற எல்லைக்குள் பழமை வாய்ந்த ஓர் கேணியாக இக்கேணி அமைந்துள்ளது. இதன் அமைப்பு அதன் பரந்து விரிந்த சூழலில் உள்ள பிரதேசங்களிலிருந்து வரும் மழை நீரைத் தேக்கி மேவிப் பாயும் மேலதிக மழை நீரை அருகிலுள்ள குடாக் கடலினுள் செலுத்தும் விதமாக உள்ளது. இது பல காலங்களாக இருக்கும் செயற்பாடாகும்.

எனினும் தற்போதைய நவீன காலத்தின் கட்டிட எழுச்சியின் காரணமாக வெள்ளம் பாய்ந்தோடும் வழிகள் அடைபட்டுக் குடிமனைகளுக்குள்ளேயே வெள்ளம் பாரியளவில் தேங்கி நின்று விடுகின்றது.

இதனால் கடும் மழை வீழ்ச்சியின்போது மக்கள் இடம்பெயர்ந்து இன்னல்களைச் சந்திக்கின்றார்கள்.

இந்நிலையில் உப்புக் கேணிக்கு என்று எது வித நிதியும் இவ்வாண்டு வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

ஆயினும் மக்களின் நன்மை கருதி அக்கேணி பல ஆண்டுகளின் பின் தற்போது நகராட்சி மன்றத்தின் புதிய சபையால் தூர்வாரல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் எமது சபையின் கௌரவ உறுப்பினர்களின் வேண்டுகோளிற்கு ஏற்ப அக்கேணியின் இரு மருங்கிலும் பாதுகாப்பு வேலி அமைப்பதற்கும் மிக விரைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

இவ் வெள்ள அனர்த்தத்திற்கு நிரந்தரத் தீர்வாக வடிகாலமைப்பு முறைமையை புதிதாக உருவாக்குவதற்கு திட்ட வரைபு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் எமது வேண்டுகோளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு வருகின்றது.

எனவே எமது சபையின் இச் செயற்பாடுகளுக்கு மக்கள் தங்கள் ஆதரவைத் தரும்படி அன்புடன் வேண்டுகின்றோம் என்றார். (ம-7)

## காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் 16,966 முறைப்பாடுகள்

(கொழும்பு)

இதுவரையான காலப் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் 16 ஆயிரத்து 966 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

[illegible] இலங்கை [illegible] அதிகாரிகளுக்கு எதிராக இது வரை 3 ஆயிரத்து 742 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தினால் இது வரை 746 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வெல்லவாயப் பிரதேசத்தில் பாரியளவு காடழிப்பு

(கொழும்பு)

வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவில் பலஹருவ மற்றும் தபரஹார கிராமங்களுக்கிடையே அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியின் பெரும் பகுதி தீ வைத்து அழிக்கப்பட்டுள்ளது.

இதில் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பழமையான மதிப்புமிக்க மரங்கள் வெட்டப்பட்டு எரிக்கப்பட்டதாகவும் பல ஏக்கர் பரப்பளவில் வனப் பகுதி அழிக்கப்பட்டதாகவும் தபரஹார ஏரியில் பாயும் பிரதான கால்வாயைக் கடத்தல்காரர்கள் அடைத்துள்ளதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 48

சொக்கன்

இப்படி இஸ்ரேல் பற்றி விதவிதமான ஊகங்கள் உலவிய போதும் அவர்கள் வாயைத் திறக்கவில்லை. ஆமாம் நாங்கள் அணுகுண்டு தயாரிக்கிறோம் என்று ஒப்புக் கொள்ளவில்லை. அதேசமயம் இதெல்லாம் சுத்தப் பொய் என்றும் கண்டிக்காமல் நழுவினார்கள்.

உண்மையில் டிமோனோவுக்குள் என்னதான் நடக்கிறது? நிஜமாகவே இஸ்ரேல் அணு ஆயுதங்களைத் தயாரித்துவைத்திருக்கிறதா? ஆம் எனில் எத்தனை ஆயுதங்கள்? எப்படிப்பட்ட ஆயுதங்கள்? ஊசி பட்டாசு ரேஞ்சா? அல்லது ஹிரோஷிமா, நாகசாகிபோல் சர்வநாசம் விளைவிக்கக்கூடியவையா? யாருக்கும் எதுவும் புரியவில்லை.

இந்த நேரத்தில் தான் டிமோனோ ஆராய்ச்சி நிலையம் பத்திரிகைகளில் ஒரு விளம்பரம் வெளியிட்டது. வேலைக்கு ஆட்கள் தேவை!

மொராக்காவில் பிறந்து இஸ்ரேலில் குடியேறிய மொர்டெசாய் வனுனு என்கிற யூதா இளைஞர் இந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டுத் தன்னுடைய விண்ணப்பத்தை அனுப்பிவைத்தார். வேலை கிடைத்துவிட்டது.

மொர்டெசாய் வேலைக்குச் சேர்வதற்கு முன்னால் சில அதிகாரிகள் அவரைச் சந்தித்தார்கள். மிஸ்டர் இது ரொம்ப இரகசியமான வேலை இங்கே என்ன நடக்குது என்று வெளியே ஒரு ஈ காக்காவுக்குக்கூட தெரியக்கூடாது புரிஞ்சுதா?

மொர்டெசாய் வனுனுவுக்குச் சரியாகப் புரியவில்லை. ஆனாலும் தலையைமட்டும் ஆட்டிவைத்தார்.

அப்படி என்றால் இந்த ரகசியக் காப்புப் பத்திரத்தில் கையெழுத்துப் போடு!

என்ன பெரிய ரகசியம். மொர்டெசாய் கொஞ்சம் கூட யோசிக்கவில்லை. அவர்கள் நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டுமுடித்தார். அவருடைய வேலை உறுதி செய்யப்பட்டது.

1977 பெப்ரவரி மாதம் மொர்டெசாய் முதன்முறையாக டிமோனோவுக்குள் நுழைந்தார். பொதுமக்கள் வெளிநாட்டுப் பருந்துப் பார்வைக்கெல்லாம் சிக்காத அந்த டாப் சீக்ரெட் ஆராய்ச்சி நிலையத்தைப் பிரம்மிப்புடன் பார்க்கப் பார்க்க அவருக்குள் அதே சந்தேகம் எழுந்தது. இங்கே என்னதான் நடக்குது? நிஜமாவே இவங்க அணுகுண்டு தயாரிக்கிறார்களா?

மொர்டெசாய் பெரியபடிப்பாளி இல்லை. ஆனால் எது சொன்னாலும் சீக்கிரத்தில் கற்றுக் கொண்டு செய்துவிடுவார். இதனால் சீனியர்கள் மத்தியில் அவருக்கு ரொம்ப நல்ல பெயர்.

அடுத்த சில வாரங்களுக்குள் மொர்டெசாய் டிமோனோவில் எங்கு வேண்டுமானாலும் சுதந்திரமாகப் போய் வருகிற அளவுக்குத் தேறிவிட்டார். அங்கே என்ன நடக்கிறது என்கிற விபரங்களும் அவருக்குப் புரிய ஆரம்பித்தன.



அணுசக்தியை நல்ல நோக்கங்களுக்குமட்டுமே பயன்படுத்த வேண்டும். அதை வைத்து ஆயுதமெல்லாம் தயாரிக்கக்கூடாது என்று எல்லோரும் கதறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இஸ்ரேல் இரகசியமாக யாருக்கும் தெரியாமல் அணுகுண்டு தயாரிக்கிறது. இது அநியாயம் இல்லையா? மொர்டெசாயின் ரத்தம் கொதித்தது.

ஆனால் மொர்டெசாய் அந்த ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு சாதாரண ஊழியர் . இஸ்ரேல் அரசாங்கத்தை எதிர்த்து அவரால் என்ன செய்ய முடியும்? அநாவசியமாக ஏதாவது சத்தம் போட்டால் அவ்வளவுதான் சீட்டைக் கிழித்து வெளியே அனுப்பி விடுவார்கள்.

மொர்டெசாயின் எரிச்சல் வேறு திசைகளில் திரும்பியது.

தன்னுடைய கல்லூரி நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு அரசியல் கூட்டங்கள், போராட்டங்கள், பேரணிகள், ஊர்வலங்களில் பங்கேற்க ஆரம்பித்தார். பல பிரச்சினைகளில் இஸ்ரேலின் நிலைப்பாடைக் கண்டித்துப் பேசினார்.

இதைக் கவனித்த டிமோனோ நிர்வாகம் மொர்டெசாயைக் கூப்பிட்டு மிரட்டியது. என்ன சார்? நீங்க பெரிய ரௌடியா? இந்த அரசியல் மண்ணாங்கட்டியெல்லாம் உங்களுக்கு எதுக்கு? ஒழுங்கா வாயை மூடிக் கொண்டு உங்க வேலையை மட்டும் கவனிங்க. இல்லாட்டி அப்படியே மூட்டை கட்டி வீட்டுக்குத் துரத்தி விடுவோம்!

மொர்டெசாயும் பதிலுக்கு எகிறினார். என்னுடைய வேலையில் ஏதாவது பிரச்சினை என்றால் சொல்லுங்க ஆஃபீஸுக்கு வெளியில நான் என்ன செய்தாலும் உங்களுக்கு என்ன? அது என்னுடைய தனிப்பட்ட விடயம்.

டொமோனோ நிர்வாகம் முடிவெடுத்தது. ம்ஹூம் இந்தப் பையன் சரிப்பட்டு வர மாட்டான்.

அவர்கள் மொர்டெசாய் வனுனுவுக்கு டிஸ்மிஸ் ஆர்டர் தயாரித்துக் கொண்டிருந்த நேரம் அவருக்கே இந்த வேலையில் ஆர்வம் போய்விட்டது.

இங்கே பணத்துக்காக அணுகுண்டு தயாரிப்பதைவிட எங்கேயாவது வெளிநாட்டுக்குப் போய்ப் பிழைத்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்துவிட்டார்.

புறப்படுவதற்கு முன்னால் அவருக்கு ஒரு திடீர் யோசனை இஸ்ரேல் இங்கே அணுகுண்டு தயாரிக்கிற விடயம் யாருக்கும் தெரியாது. அவர்களாக இதை ஒத்துக் கொள்ளப் போவதில்லை போறதில்லை. யாராவது கண்டுபிடிச்சுச் சொன்னாலும் சுத்தப் பொய் என்று மறுத்துவிடுவார்கள்.

ஆக அணுகுண்டு விடயத்தில் இஸ்ரேலைக் கையும் களவுமாக மாட்டவைக்கவேண்டும் என்றால் அதற்கு ஒரே ஒரு வழிதான்.

இங்கே என்ன நடக்கிறது என்பது வெளி உலகிற்குத் தெரிய வேண்டும். என்ன செய்யலாம்?

அடுத்த நாள் மொர்டெசாய் வேலைக்கு வரும்போது ஒரு புகைப்பட கமராவை ரகசியமாக மறைத்துக் கொண்டுவந்தார்.

இரவு நேரத்தில் யாரும் கவனிக்காத போது டிமோனோவின் முக்கியமான இயந்திரங்கள், அணு ஆயுதத் தயாரிப்புகள், உற்பத்தி ஏற்பாடுகளையெல்லாம் ஒவ்வொன்றாகப் படம் பிடிக்க ஆரம்பித்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியசாலை...

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வெள்ளிக்கிழமை வீடு திரும்பியுள்ளார்.

வைத்தியசாலையிலிருந்து வெளியேறினாலும் ரணில் விக்கிரமசிங்க வீட்டில் தொடர்ந்து ஓய்வு எடுக்க வேண்டும் என மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை குறித்து அவரது குடும்ப மருத்துவர் கண்காணிப்புடன் இருத்தல் வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கியுள்ளனர். (ம-7)

## மரபுரிமைச்...

தொடர்பில் அவதானித்ததோடு இடித்த சுமைதாங்கியை இடித்தவர்களை வைத்தே மீண்டும் அமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (ம-7,30)






















## முன்னாள் அமைச்...

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தாக்கல் செய்த மற்றொரு வழக்குத் தொடர்பாக நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முன்னிலையான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை விளக்கமறியலில் வைக்க மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜெயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

மேலும் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ராஜித சேனாரத்னவை முன்னிலைப்படுத்தவும் உத்தரவிட்டார். (ம-7)

## உறவுகள்...

அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு தற்போதைய அரசாங்கம் தயாராக உள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் தென்னிலங்கையின் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது வடக்கு கிழக்கில் இருந்து வருகை தந்திருந்த பல்வேறு தரப்பினரும் தங்களது கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடித்தருமாறு பல்வேறு கோரிக்கைகளைத் தாம் முன்வைத்துள்ளதாகத் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்திருந்தவர்கள் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் பிரதமர் செயலகத்தில் கடிதமொன்றையும் சமர்ப்பிக்கவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (ம-7)

## முன்னாள்...

யப்பட்டுள்ளார்.

ஒரு வீட்டை 2006ஆம் ஆண்டு தாக்கி சேதப்படுத்தியமை, ஒருவரைத் தாக்கியமை போன்ற குற்றச்சாட்டின் கீழ், வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக கொச்சிக்கடைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் வாக்குமூலம் வழங்கிய பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## வடக்கு - கிழக்...

ளது.

கிட்டுப் பூங்கா முன்றலில் இருந்து பேரணியாகச் சென்று, மனிதப் புதைகுழிகள் காணப்படும் செம்மணிப் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த போராட்டத்திற்கு பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். (ம-7,30)

## இனப் படுகொலை...

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் இனப் படுகொலைக்கு நீதி கோரி, யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாகவும் நேற்று வெள்ளிக்கிழமை காலை கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு, கிழக்கு மண்ணில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் நடைபெற்ற தமிழ் இனப்படுகொலைகளுக்கும் நீதியைக் கோருவதற்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் கையெழுத்து சேகரிக்கும் செயற்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் நேற்று ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் குறித்த கையெழுத்து சேகரிக்கும் செயற்பாடு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ம-7,33)

## பரந்...

வில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் முரசுமோட்டையைச் சேர்ந்த சின்னத்தம்பி இசைவாணன் (வயது-24) மற்றும் கந்தளாய் மூதுரைச் சேர்ந்த நவரத்தினராஜா செந்தூரன் (வயது-25) என்பவர்களே உயிரிழந்தவர்கள் ஆவார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த அரச பேருந்து பரந்தன் அரச விதை உற்பத்தி நிலையத்திற்கு முன்பாக உள்ள தரிப்பிடத்தில் நிறுத்தியபோது பின்னால் வந்த டிப்பர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதேவேளை டிப்பருக்குப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானதுடன் மற்றுமொருவர் படுகாயம் அடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,315,316)

## சில பிரதேசங்களில் மழைக்கு வாய்ப்பு

நாட்டின் மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாகவும்,

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் சில இடங்களில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (ம-7)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட தச்சுவேலை மெசின் (Wood working Machine) "Lida" ஒரிஜினல் 12" மற்றும் 10" Sliding இணைப்புடன் இப்பொழுது எம்மிடம். இதை ஒத்த போலிகள் தரம் குறைந்த மோட்டாருடன் சந்தையில் ஏமாந்து விடாதீர்.

V2 "நாங்கள் உங்களோடு"



ஆர்க் .என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

(5177)

Hotline: 071 535 7799 / 071 535 7803



## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் 30,000/- 50,000/-

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-3764)

V2 TRAVELS 076 1410725 076 8226236

v2vacancies@gmail.com



## காணி வீடு விற்பனை கொள்வனவு

யாழ்ப்பாணம், தீவகம், கொழும்பு மற்றும் பலாலி, A9, K.K.S. பருத்தித்துறை வீதிகளிற்கு அருகில் வீடு, காணி விற்கவுள்ள உரிமையாளர்கள் மற்றும் வாங்கவுள்ளவர்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

(5179)

076 311 9485
076 050 3863


# வரலாற்று மைல்கல்லை கடந்த கொழும்பு பங்குச் சந்தை

கொழும்பு பங்குச் சந்தையின் (CSE) அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI) முதன்முறையாக 21,000 புள்ளிகள் என்ற வரலாற்று மைல்கல்லைக் கடந்துள்ளது.

நேற்றுக் காலை சுமார் 11.00 மணியளவில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் இந்த தனித்துவமான மைல்கல்லைக் கடந்ததாகவும் குறித்த சந்தர்ப்பத்தில், அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் முந்தைய வர்த்தக நாளுடன் ஒப்பிடும் போது 203.71 புள்ளிகள் அதிகரித்து 21,003.97 புள்ளிகளாகப் பதிவாகியிருந்ததாகவும் கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது. (ம-7)


## பணிப்பெண் தேவை

பருத்தித்துறையில் உள்ள வீடொன்றில் வீட்டு வேலைகளைச் செய்து இரண்டு பிள்ளைகளைப் பராமரிக்க பணிப்பெண் தேவை.

வயது : 40 - 50

பணி நேரம் : காலை 7.00 – மாலை 5.00

(1497)

077 459 7938
075 712 7528



## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 209/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 170/= | Max 3Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 240/= | |
| 1Kg நவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 188/= | |
| 1Kg தீட்டல்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2750/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 188/= | |
| 1Kg கீரிச்சம்பா | - 260/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 1150/= | |
| 1Kg கடலை | - 378/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |

Max 01



400g Anchor 1140/= ~~1260/=~~



1Kg சன்லைட் 280/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(1499)

Happy Supermarket 0777 8080 30



## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வர்த்தக ஸ்தாபனத்துக்கு றைவர், விற்பனை உதவியாளர் போன்ற வேலைக்கு வேலையாள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

RELIANCE DISTRIBUTORS

37, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(5174)



## Auto பாடசாலை சேவை

அளவெட்டியில் இருந்து தெல்லிப்பழை வரை Auto பாடசாலை சேவை நடைபெறும். தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும். இருவருக்கு இடம் உண்டு.

(1500)

070 402 3769



## வேலைவாய்ப்பு

நெல்லியடியில் அமைந்துள்ள புடவைக் கடைக்கு விற்பனை உதவியாளர் (ஆண்/பெண்) முழு நேர/ பகுதி நேரப் பணியாளர்கள் தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

(1495)

077 312 8378


# மரண அறிவித்தல்

## செல்லையா பாலரத்தினம் (நெல்லியான் பாலா)

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் நாரம்பிட்டிய, முன்னாள் பராமரிப்பு முகாமையாளர் Phoenicia Hotel kuwait )



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் நெல்லியான் மற்றும் தொல்புரத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. செல்லையா பாலரத்தினம் அவர்கள் 28.08.2025 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - பொற்கொடி தம்பதிகளின் அன்பு மருமகனும் விஜயலக்சுமியின் அன்புக் கணவரும் விஜிதா (மருந்தாளர் கனடா), கலாநிதி (Dr), சுமிர்த்தா (துணைப் பேராசிரியர் USA), பிருந்தாவன்(சிரேஸ்ர பொறியியலாளர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவச்செல்வன் (கனடா), தணிகைக்குமரன் (பௌதிகவியல் ஆசிரியர், USA) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஷகானா, ஷஞ்சனா (கனடா), ஷதுர்சனா(USA), சத்விஹா (USA) ஆகியோரின் பாசமிகு பேரனாரும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், செல்வரத்தினம், இராசரத்தினம், (முன்னாள் இரசாயனத் தொழிற்சாலை மேற்பார்வையாளர் பரந்தன்), விஜயரட்ணம் (ஓய்வு நிலை பொலிஸ் உத்தியோகத்தர்), சிவகுமாரன் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர்) மற்றும் சந்தனகுமரன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகாலக்சுமி, காலஞ்சென்றவர்களான இராசகுமார் (ஓய்வு பெற்ற அதிபர்), சந்திரகுமார் மற்றும் சூரியகுமார் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), தனலக்சுமி, செல்வலக்சுமி, ஸ்ரீகுமார் மற்றும் நந்தகுமார்(உதவிப் பொலிஸ் பரிசோதகர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் நாளை 31.08.025 ஞாயிற்றுக் கிழமை தொல்புரத்தில் உள்ள அவரது இல்லத்தில் பகல் 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பிருந்தாவன் (மகன்): +94776420783 (Srilanka)
விஜிதா (மகள்) : +016476325469 (Canada)
சுமிர்த்தா (மகள்) : +012409106613 (USA)

தகவல் : குடும்பத்தினர்

(5178)

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 09 . 07 . 1944

ஆண்டவன் அடியில் 23 . 08 . 2023

## அமரர் கார்த்திகேசு குணபாக்கியவதி

*திதி: ஸப்தமி*

ஈராண்டு சென்றதம்மா எம்மை விட்டு நீர் பிரிந்து
காற்றோடு கலந்து காணாத
உம் முகத்தை காணத் துடிக்கின்றோம்
பாசத்தின் பிணைப்பும், இணை பிரியா துணையும்
ஒளிவு மறைவிலா உந்தன் ஒப்பற்ற பேச்சும்
எப்போதும் எம் நினைவில் ஈராண்டுகளாய்
கூடி வாழ்ந்த வாழ்க்கையதன் பெறுபேற்றை
இவ்வுலகில் நாம் உணர உணர்த்திய உத்தமியே அம்மா!
மனமாறாத் துயரோடு உம் நினைவினூடும்
வாழ்க்கையிலே விழி நிறை நீரோடும்
வழி கடந்து செல்கின்றோம்
இன்னுயிர் துறந்து இறையோடு கலந்த உமக்காக

(1498)

சிற்றம்பலம் வீதி, உசன், மிருசுவில்.

*என்றும் உங்கள் நினைவுகளுடன்*
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 121, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org